பக்கங்கள்: 09

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 | வள்ளுவர் ஆண்டு 2054 | பங்குனி 06 | வியாழக்கிழமை | 23.03.2023 | கதிர் 134



(படம் டியாகோகார்ஸியாவில் ஈழத் தமிழர்கள் தங்க வைக்கப்பட்டுள்ள கூடாரம்)

# டியாகோகார்சியாவிலிருந்து 5 தமிழர்கள் ருவாண்டாவுக்கு

## மருத்துவ சிகிச்சைகளுக்காக அனுப்பி வைப்பு

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மார்.23

கனடா செல்லும் வழியில் படகு பழுதடைந்து டியாகோகார்சியா தீவில் தஞ்சமடைந்த ஈழத் தமிழர்களில் ஐவர் மருத்துவ சிகிச்சைகளுக்காக ருவாண்டாவுக்கு அனுப்பப்பட்டுள்ளனர்.இந்தத்தகவலைஅங்குள்ளபிரிட்டிஷ் அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர். என்ன காரணத்துக்காக அவர்கள் அனுப்பப்பட்டார்கள் என்று அதிகாரிகள் தெரிவிக்கவில்லை.

அவர் ஐவரும் தம்மை பிரித்தானியாபொறுப்பேற்கவேண்டும்எனக்கோரி தற்கொலை முயற்சியில் ஈடுபட்டதனால் சிகிச்சைக்காக ருவாண்டா நாட்டிற்கு அனுப்பி வைக்கப்பட்டனர் என்று தீவில் எஞ்சி யுள்ளவர்கள் வடக்கில் உள்ள தமது உறவினர்களிடம் தெரிவித்தனர் என்று காலைக்கதிர் பத்திரிகை உறுதிப் படுத்தியது.

☞2

## இனிது ரகசியம் அல்ல!

இது ஒரு மூத்த ஊடகவியலாளரின் ஆதங்கக் கருத்து. அவரது சொல்லாடல்களில் - வார்த்தைகளில் - சுருக்கித் தருகிறேன். அது வருமாறு:-

1990 - 1996 யாழ். குடாநாடு பெரும்பாலும் விடுதலைப் புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் இருந்த காலம். அதுவரை இயங்கிய பல அச்சு ஊடகங்கள் மெல்ல மெல்லப் புலிகளின் சுவீகரிப்புக்குள் விழுந்து, செயலிழந்து, இல்லாமல்போன காலகட்டமும் கூட. 'ஈழநாடு', 'ஈழமுரசு', 'முரசொலி', 'திசை' 'சற்றடே ரிவ்யூ' என்று ஒரு பட்டியல் உண்டு. (இதில் 'ஈழநாடு' சில வருடங்களுக்கு முன்னர் புத்துயிர்ப்புப் பெற்றமை வேறு விடயம்.)

ஆக, ஒரே ஊடகம்தான் அச்சமயத்தில் தப்பிப் பிழைத்தது. அது யாரால் அல்லது என்னகாரணத்தினால்என்பதுஅதில்இன்று குளிர் காயும் பிரகிருதிகளுக்கு தெரியாமல் இருக்கலாம். ஆனால் வடக்கின் மூத்த வாசகர்களுக்கு நன்கு தெரியும்.

இனி அடுத்த விடயத்துக்கு

☞2

### நீதித்துறையை மலினப்படுத்தும்

## அரசின் செயலுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் இணைவு

நீதித்துறையின் கண்ணியம் மற்றும் அதன் முன்வருகையைக் குறை மதிப்புக்கு உட்படுத்தும் அரசின் முயற்சிக்கு எதிராக எதிர்க்கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்த கூட்டறிக்கையில் கையொப்பமிட்டனர் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப் பிரிவு புதன்கிழமைதெரிவித்தது.

நாடாளுமன்றத்தில்

☞2

## புதிய அமைச்சரவையை நியமிக்க ரணில் திட்டம்

### மொட்டுக் கட்சியில் பலருக்கு வாய்ப்பு

சர்வதேச நாணய நிதியக்கடன் தொகையின் முதல் தவணைக் கொடுப்பனவு கிடைத்துள்ள நிலையில், புதிய அமைச்சரவையை நியமிப்பதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதிட்டமிட்டுள்ளார் என்று அரசவட்டாரம் தெரிவிக்கின்றது.

பலமாதங்களாக இழுபறியில் இருந்துவரும்10புதியஅமைச்சர்களின் நியமனமும் இதில் அடங்கும் எனத் தெரிய

☞2

### நாணய நிதிய விடயங்களை கையாள

## ரணிலை நியமிக்குமாறு பசிலே பரிந்துரைத்தார்

### இந்திக்க அனுரத்தவின் கருத்து இது

சர்வதேசநாணய நிதியத்தின் விடயங்களை கையாள்வதற்கு ரணில்விக்கிரமசிங்கவை நியமிக்குமாறுபசில்ராஜபக்வே பரிந்துரைத்தார்என்று பொதுஜனபெரமுனவின் கம்பஹா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இந்திக்க அனுரத்த தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள்

☞2

## சுகாதார அமைச்சு கிடைத்தால் ரரஜித பொறுப்பேற்கத் தயார்

### அவரே நேற்று அதிரடி அறிவிப்பு



புதிய அமைச்சரவையில் சுகாதார அமைச்சு கிடைத்தால் அதைப் பொறுப்பேற்கத் தான் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளு மன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்னதெரிவித்தார்.

அரசுடன் ராஜித இணையப்போகின்றார் என்பதுநீண்டநாட்களாக அடிபட்டுவரும் கதை. அவர் விரும்பும் சுகாதார அமைச்சு கிடைக்காமையினால்தான் அவர் அரசுடன் இணைவது தாமதமாகின்றது என்று அரசியல்

☞2

## அரச துறை வியாபாரம் செய்ததால் அபிவிருத்திக்கான நிதி வீணடிப்பு

### இப்படிச் சொல்கிறார் ஜனாதிபதி

அரசதுறைவியாபாரத்தில் ஈடுபட்டதால் மகாவலி போன்ற 100 திட்டங்களை நிர்மாணிப்பதற்கான பணம் கடந்த தசாப்தங்களில் வீணடிக்கப்பட்டது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

சுதந்திரச் சதுக்கத்தில் நேற்றுநடைபெற்றமறைந்த முன்னாள் பிரதமர் டி..எஸ். சேனாநாயக்கவின் 71ஆவது நினைவுதின நிகழ்வில் கலந்து கொண்டபோதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கஇதனைக்குறிப்பிட்டார்.

அவர்மேலும்தெரிவித்ததாவது:

மறைந்த பிரதமர் மகா மான்ய டி..எஸ்.சேனாநாயக்கவின் தொலைநோக்குப் பார்வையைநாம்ஒதுக்கினாலும் பிரதமர் லீ குவான் யூ அந்த தொலைநோக்குப் பார்வையைப் பின்பற்றி சிங்கப்பூரை அபிவிருத்தியடைந்த நாடாக மாற்றியுள்ளார். ஆகவே வலுவான மற்றும் சக்திவாய்ந்த இலங்கையொன்றை

☞2

## ஆசிரியர் சங்கத்தினர் நேற்று கோட்டையில் போராட்டம்

### ஆசிரியர் இடமாற்றத் தடையை எதிர்த்து

அரச பாடசாலைகளில் ஆசிரியர் இடமாற்றங்கள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளமைக்கு எதிர்ப்பு தெரிவித்துஇலங்கைஆசிரியர் சங்கம் மற்றும் இலங்கை ஆசிரியர் சேவை சங்கம் ஆகியவற்றினால்கொழும்பு-கோட்டைதொடருந்து நிலையத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு நிதியமைச்சு, ஜனாதிபதி அலுவலகம், ஜனாதிபதி மாளிகை மற்றும் காலி முகத்திடல் பகுதிகளுக் குள் செல்வதற்கு கோட்டை நீதிவான் திலின கமகேவினால்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

கோட்டைபொலிஸாரால் முன்வைக்கப்பட்ட

☞3

## ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்கள் அரச தரப்பை விளாசித் தள்ளிய சஜித்



சர்வதேசநாணயநிதியத்துக்குச் செல்வதைத் தடுத்தவர்களே தற்போது ஆட்டுத் தோல் போர்த்திய ஓநாய்கள் போன்று செயற்பட்டு வருகின்றனர் என்று குற்றஞ்சாட்டிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, சர்வதேச நாணய நிதியத்துடன் அரசு செய்துள்ள ஒப்பந்தத்தில் இணங்க முடியுமான விடயங்களில் இணங்குவோம் என்றும்இணங்கமுடியாதவிடயங்களில்எமதுநிலைப்பாட்டைவெளிப்படையாகத் தெரிவிப்போம் என்றும் அறிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை சர்வதேச நாணய நிதியத்தின் அறிக்கை தொடர்பாக ஜனாதிபதியின் உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை பிரேரணையில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலங்கை ஏகாதிபத்திய நாடு அல்ல. ஜனநாயக

☞3

### சர்வதேச நாணய நிதியத்திற்கு

## ஜனாதிபதி அனுப்பிய பதில் கடிதம் எங்கே?

### ஹர்ஷ டி சில்வா சபையில் கேள்வி

சர்வதேசநாணய நிதியத்துக்கு ஜனாதிபதியால் அனுப்பி வைக்கப்பட்ட கடன் உறுதிப்பாட்டுக்கான பதில் கடிதம் எங்கே என்று கேள்வியைத் தொடுத்த ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி. ஹர்டிசில்வா ஜனாதிபதி அதனை அனுப்புவதற்குமறந்து விட்டாரா என்றும் எள்ளிநகையாடினார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க புதன்கிழமை நாடாளுமன்றத்தில் உரைநிகழ்த்தியதன் பின்னர் உரையாற்றிய

☞2

## வவுனியாவில் உறவுகள் நேற்று அரிக்கன் லாம்புப் போராட்டம்



வவுனியாவில் அரிக்கன்விளக்குடன்காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளின் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வவுனியா வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு முன்பாகத் தொடர் போராட்டம் மேற்கொள்ளும் கொட்டகைக்கு முன்னால் புதன்கிழமை இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நாம் போராட்டம் தொடங்கியபோது அரிக்கன் விளக்குகளையே பயன்படுத்தினோம். அதன் பின்னர் எமது போராட்ட இடத் துக்கு மின் சார சபையே மின்சாரம் வழங்கியது. தற்போது மின்சார சபைஅதைநிறுத்தியுள்ளது. எமது போராட்டத்தைக் குலைக்க இந்த அரசு அடாத்தாக எம்மைக் கைது செய்தது. ஆனாலும், எமது போராட்டம்

☞3

## நாட்டை மீட்கும் திட்டத்தை நேற்று வெளியிட்டார் ரணில்



சர்வதேச நாணய நிதியத் தின் கடன் வசதியை பெற்றுக்கொள்வது தொடர்பில் நாடாளுமன்றத்தில் புதன் கிழமை சிறப்பு உரை ஆற்றியபோது ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டை மீட்டெடுப்பதற்கான தனது திட்டத்தினையும் பகிரங்கப்படுத்தினார்.

அதுதொடர்பில்அவர்தெரிவித்ததாவது:-

**அரச வருமானத்தை அதிகரிக்கும் திட்டம்**

2025ஆம் ஆண்டுக்குள் முதன்மை பற்றாக்குறையை மொத்தத் தேசிய உற்பத்தியில் 2.3 சதவீதமாக மாற்றுவதே எமது இலக்காகும்.

இலங்கை அரசின் வருமானம் தற்போது மொத்தத் தேசிய உற்பத்தியில் 8.3 சதவீதமாகும். உலகின் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், நமது அரசின் வருமானம் மிகக் குறைந்த அளவிலேயே உள்ளது. இதனால்தான் 2026 ஆம்ஆண்டுக்குள்அரசவருமானத்தை மொத்தத் தேசிய உற்பத்தியில் 15

☞3

## வடமாகாணத்தில் இலவச சீருடை வழங்கல் இன்று

வடக்குமாகாணத்திற்குட்பட்ட 5 மாவட்டங்களைச் சேர்ந்த பாடசாலை மாணவர்களுக்கு 2023 ஆண்டுக்கான இலவச சீருடை மற்றும் பாடப் புத்தகங்களை வழங்கும் தொடக்க நிகழ்வு இன்று நடைபெறவுள்ளது. வட மாகாணக் கல்வித் திணைக்களத்தின்ஏற்பாட்டில் வலயத்துக்கு ஒரு பாடசாலை என்ற அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டு அந்தப் பாடசாலைகளில் குறித்த நிகழ்வு நடைபெற ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக ஆளுநர் செயலகம்

☞2

தமிழ் பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

## இனி இது .....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) வருவோம். இப்படிஒவ்வொரு ஊடக நிர்வாகமும் புலிகளின் தலையீட்டுக்கு வெற்றிலை வைத்துக்கொண்டிருந்தஅந்த காலகட்டத்தில், அதுவரை சுயாதீனமாக இயங்கிக் கொண்டிருந்த மேற்படி பத்திரிகைகளில் ஒன்று தன் ஆசிரிய பீடத்துக்கு உரிய வழிகாட்டி இல்லாமல் தடுமாறியது. வந்தவர், போனவர், நின்றவர்கள் எல்லோரும் ஆசிரியர் என்று எழுதுகோல் லாகனை எடுத்துச்சுழற்றினர். புஸ்வாணக் கட்டுக் கதைகள், கிசுகிசுப்பு வதந்திகள், அரசல் புரசல் நையாண்டிகள், கிளுகிளுப்புச் பேச்சுக்கள் போன்றவற்றை செய்திகளாக்கி, வாசகர்களைத் தூண்டி, விநியோகம்-விற்பனையை-அதிகரிக்கலாம் என்று ஒரு வக்கிர புத்தி போலும் அந்த ஆசிரிய பீடத்தினருக்கு.

ஒரு நாள் திடீரென முற்பகத்தில் ஒரு பெரிய செய்தி. தென்மராட்சியில் இரண்டு இளம் ஆசிரியைகள் ஒரு சாதாரண தர வகுப்பு மாணவனை தமது பாலியல் இச்சைக்குப் பயன்படுத்திக் கொண்டனர் என்றும், அது விடயம் அம்பலமாகியுள்ளது என்றும், பாடசாலை பெயர் குறித்தோ, பிற விவரங்கள் பற்றியோ குறிப்பிடாமல், அநாமதேயப்பாணியில்செய்தி இடம் பெற்றிருந்தது. இன்று போல சமூக ஊடகங்கள், தொலைத் தொடர்புகள் இல்லாத காலம் அது. அந்தப் பத்திரிகைக்கு அன்று பலத்த கிராக்கி. மற்றப்பத்திரிகைகளை குடாநாட்டு வாசகர்கள் ஏளனமாகப் பார்த்தனர். முக்கிய செய்தியைக் கோட்டை விட்டு விட்டார்களாம்...!

நான் அப்போது உதயனில் பணியாற்றிக் கொண்டிருந்தேன். எங்கள் செய்தியாளர்கள் தேடிப் பார்த்ததில் அப்படிஒருசம்பவம்நடந்ததாக எங்கும் தகவல் இல்லை.

அந்தப்பத்திரிகை அடுத்த நாளும் விடவில்லை. தனது முதல்நாள்செய்திக்கு'ஃபாலோ அப்' வேறு. இந்த விவகாரத்தை - விடயத்தை - ஒட்டி கல்வித் திணைக்களம் சுறுசுறுப்பாகி தனது விசாரணையை முடுக்கி விட்டிருப்பதாகவும், இரு ஆசிரியர்களும்எந்நேரமும்சேவையிலிருந்து இடைநிறுத்தப்படலாம் என்றும்கூட அந்தச் செய்தியில் விவரிக்கப்பட்டதாக எனக்கு நினைவு.

நல்ல காலம், அந்தக் காலத்தில் இலங்கைப் பொலிஸ் இங்கு இல்லை. இருந்திருந்தால் பொலிஸ் வட்டாரங்களும் இத்தகவலை உறுதி செய்தன என்று அந்தப் பத்திரிகை கண்ணை மூடிக்கொண்டு எழுதி இருக்கும். ஏனென்றால் இப்போதெல்லாம் அநாமதேய சமூக ஊடகங்களும், பொறுப்பு கூறும் கடப்பாடுடைய பத்திரிகைகளும்கூட இது போன்ற அநாமதேய செய்திகளுக்கும், பச்சை புளுகுத் தகவல்களுக்கும், அபத்தமான ஊடகக் குற்றங்களுக்கும் ஆதாரமாக காட்டும் சொல் இதுதான். 'பொலிஸ்வட்டாரங்கள் கூறின அல்லது உறுதிப்படுத்தன அல்லது தெரிவித்தன' என்பது தான். ஏனென்றால் இப்படி 'சைபர் கிரைம்' வகையறாச் செய்திகளை பொலிஸ் வட்டாரங்களை மேற்கோள் காட்டித்தான் மக்களை நம்ப வைக்கப்படுகின்றன, மக்கள் மீது திணிக்கப்படுகின்றன.

பொலிஸ்வட்டாரங்களை மேற்கோள்காட்டி பிரபலப்படுத்தப்படும் செய்திகளின் - குற்றங்களின் - தாக்கம் குறித்து கண்டும் காணாமலும் இருப்பதன் மூலம் பொலிஸே இத்தகைய குற்றங்களுக்கு நேரடியாகத் துணை போவது தான் இங்கு 'வேலியே பயிரை மேயும் கதையாக' இப்போது உள்ளது. இது குறித்து நேரடியாகப் பொலிஸ் தரப்புக்கு விளக்குவதற்கும் நான் தயாராக இருக்கிறேன்.

சரி. இனிப் பழைய விடயத்துக்கு வருவோம். இரண்டாம்நாள் செய்தி வெளிவந்ததுமே புலிகளே நேரடியாகக் களத்தில் இறங்கினர். பத்திரிகை அலுவலகத்துக்கு நேரில் சென்று எங்கு சம்பவம் நடந்தது, யார் சம்பந்தப்பட்டனர் என்று கேட்டனர். உரிய பதில் இல்லை. அவர் சொன்னார், இவர் கூறினார் என்று கதை விட்டனர். செய்தி மூலத்தைக் காட்ட மாட்டோம் என்று கூறி புலிகளிடம் தப்பி விட முடியாத நிலைமை. முழுதாக விசாரித்ததில் சந்தியில் யாரோ பேசிய நக்கல் பேச்சை கைகால் போட்டு செய்தியாக்கி, வக்கிரம் செய்திருக்கின்றார் ஆசிரியர் ஒருவர் என்பபது அம்பலமாயிற்று.

அதைப் பின்னர் தமது பத்திரிகையில் பகிரங்கமாக ஒப்புக் கொள்ள வேண்டியும் நேர்ந்தது. அதை அடுத்துத்தான் அந்த ஊடகத்தின் ஆசிரியர் பீடத்தை 'கவனிக்கவும் கண்காணிக்கவும்' வெளி ஒருவரை நேரடியாக நியமித்தனர் புலிகள். அது பற்றிய தகவல் ஏனைய பத்திரிகைகளின் ஆசிரிய பீடத்தின் பொறுப்பாளர்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இப்படித்தான் அந்த ஊடகத்தின் மீதான புலிகளின் சுவீகரிப்பு நடவடிக்கைக்கு வெற்றிலை வைக்கப்பட்டது.

இப்போது புலிகள் இல்லை. ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் தம் இஷ்டப்படி தறிகெட்டு ஊடக (அ)தர்மம்பேணும்துர்பாக்கிய நிலைமை.

அன்று விழுந்து கிடந்த விநியோகத்தைதூக்கிநிறுத்துவதற்காக கிளுகிளுப்புக் கதையைப் பொத்தம் பொதுவில் யாரையும் சுட்டாமல் வெளியிட்டு, முயற்சித்த பத்திரிகை அதனால் தனது தனித்துவத்தை இழந்தது.

இன்று யாழ். பத்திரிகை ஒன்று தனிப்பட்ட காழ்ப்புணர்வுக்காக நடக்காத ஒரு விடயத்தைநடந்ததாகப் பறை தட்டி, பிரசாரப்படுத்தி விட்டு - இந்தா பொலிஸ் விசாரணை என்று பிரபலப்படுத்தி விட்டு - இப்போது பதுங்கி இருக்கின்றது.

ஓர் ஊடகவியலாளரைப் பற்றி கேவலம் கெட்ட அநாமதேய சமூக ஊட கம் ஒன்றில் அபத்த குற்றச்சாட்டுடன் ஒரு செய்தி கட்டுரை வெளியானது. இது, இன்று கட்டுமட்டில்லாத சமூக ஊடக கட்டமைப்பில் சகஜம். ஏதோ ஒரு நாட்டில், எங்கோ ஒரு மூலையில் இருந்துகொண்டு, 'சூரியன் இன்று மேற்கில் உதித்தது' என்று எழுதலாம். யாரும் அதை மறுக்கப் போவதில்லை. யாரிடம் போய் மறுப்பது? அப்படி அபத்தம் எழுதியவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவும் முடியாது. 'மலடி பிள்ளை பெற்றாள்' என்றோ, 'காலே இல்லா முடவன் எழுந்து ஓடினான்' என்றோ கூட எழுதலாம். 'காந்தி பெண்பித்தர்' என்று எழுதும் இத்தகைய ஊடகங்கள் இன்று தாராளம். அதுவல்ல விடயம். அப்படி ஓர் ஊடகவியலாளர் குறித்து அபத்தமாக வந்த குற்றச்சாட்டுச் செய்தியை, மக்கள் மத்தியில் உண்மையைப் போல் காட்டுவதற்காக, நமது யாழ் பத்திரிகை ஒன்று ஒரு பாடசாலை மாணவனை 'அதுவும் மனக்குழப்பத்தில் சிக்கியிருந்த மாணவனை' மேலும் சிக்கலில் மாட்டும் ஈனத்தனமான செய்தியை முன் பக்கத்தில் கீழ்த்தரமாக, கேவலமாகப் பிரசுரித்து விட்டுத் தனது மட்ட ரக புத்தியைக் காட்டி இருக்கின்றது. அந்த ஊடகவியலாளர் சார்ந்திருந்த பத்திரிகையையும் இதன் மூலம் கேவலப்படுத்தி விடலாம் என்ற நப்பாசையில் அந்தச் செய்திக்கு அளவுக்கு அதிக முக்கியத்துவமும் வேறு கொடுக்கப்பட்டிருந்தது.

அந்த மோசமான செயலுக்கு, வழமை போல அநாமேதய பொலிஸ் வட்டாரங்களை வேறு சாட்சிக்கு இழுத்துள்ளது அந்தப் பத்திரிகை. கேட்டால் செய்தி மூலத்தை காட்ட மாட்டோம் என்று ஊடக (அ) தர்மப் பாதுகாப்புக்குள் புகுந்து கொள்வார்கள். நல்ல காலம் புலிகள் இல்லை - நீதி, நியாயம் கேட்டறிந்து வெளிப்படுத்து-வதற்கு.

சரி. அந்த ஊடகம் வெளியிட்ட செய்தி உண்மையானால், அக் குற்றத்துக்கான கைது ஒரு வாரம் கழிந்து ஏன் இன்னும் நடக்கவில்லை? அந்த ஆசிரிய பீடத்துக்கு தகவல் தந்த பொலிஸ் வட்டாரம் தூங்குகின்றதா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்!

அந்த மட்ட ரக செய்தியை முன்னின்று வரைந்து, பிரசுரித்த அதன் ஆசிரியரின் 'லீலை'கள் பலவுண்டு. அதனை நீங்களே உங்களின் (இந்த) பத்தியில் ஏற்கனவே கோடிகாட்டி இருக்கிறீர்கள். நானும் விரைவில் அதனை விலாவாரியாக அம்பலப் படுத்துவேன் - முழு விவரங்கள், பெயர்கள், சாட்சிய ஆதாரங்களுடன்.

'இதுஅந்தமூத்தஊடகவி-யலாளரின் ஆதங்க விவரிப்பு. அவர் மேலும் விவரம் தந்தால்' அவை சட்டத்துக்கும் ஊடக தர்மத்துக்கும் நியாயமாக அமைந்தால் - அவற்றையும் வாசகர்களுடன் பகிர்வேன்.

**- இடி மின்னல் -**

## டியாகோகார்சி ...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) இலங்கையில் இருந்து கனடா செல்லும் நோக்கில்

2021-03-21இல் இலங்கையில் இருந்து 63 பேர் இந்தியா பயணித்து இந்தியாவில் தங்கியிருந்த மேலும் 20 இலங்கையர்களையும் சேர்த்துக்கொண்டு மொத்தம் 89 பேர் 2021-09-23 அன்று இந்தியாவின் கொல்லத்தில் இருந்து புறப்பட்டு கனடா நோக்கிப் பயணித்துள்ளனர். 12 நாள் பயணத்தின் பின்னர் படகில் ஏற்பட்ட கோளாறு காரணமாக 2021-10-04 இல் டிக்கோகார்சியா தீவில் தஞ்சமடைந்தனர்.

இவ்வாறு தஞ்சமடைந்தவர்களை டிக்கோகார்சியாத்தீவில் உள்ள பிரித்தானியப் படைகள் அடைக்கலம் வழங்கி பராமரித்து வருகின்றபோதும் அவர்கள் விரும்பும் நாட்டிற்குச் சென்று வாழ அனுமதிக்கவில்லை.

டியாகோகார்சியா தீவில் அமைக்கப்பட்ட இடைத் தங்கல் முகாமில் ரெண்ட் கொட்டகைகளிலேயே பராமரிக்கப்படுகின்றனர். அங்கு தற்சமயம் இலங்கையர்கள் நூறு பேர் வரையில் இருக்கின்றனர் என்று தொண்டு நிறுவனம் ஒன்று தெரிவித்தது. 2021ஆம் ஆண்டு முதல் 200 இலங்கையர்கள் அங்கு வந்தடைந்தனர் என்றும் சிலர் சுயவிருப்பின் பேரில் இலங்கைக்குத் திரும்பி விட்டனர் என்றும் சிலர் தாம் வந்த படகிலேயே வேறு நாடுகளை நோக்கிப் பயணப்பட்டனர் என்றும் அந்தத் தொண்டு நிறுவனப் பிரதிநிதி தெரிவித்தார்.

17 மாதங்களாக தொடர்ந்தும் தடுத்து வைக்கப் பட்டிருப்பவர்கள், தமக்கு பிரித்தானியா தஞ்சமளிக்க வேண்டும் வலியுறுத்தி வருகின்றனர். ஆனால், எந்த வொரு சந்தர்ப்பத்திலும் பிரித்தானியாவிற்குள் அவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்றும் பெயர் குறிப்பிடப்படாத மூன்றாம் நாடு ஒன்றுக்கே அவர்கள் இடம்மாற்றப்படுவார்கள் என்றும் பிரிட்டன் அரசு தெரிவித்துள்ளது.

இதனால் ஏற்பட்ட மன அழுத்தம் காரணமாக முகாமில் இருந்த ஐந்து பேர் தற்கொலைக்கு முயன்றனர் என்பதால் தற்போது ருவாண்டாவிற்கு அனுப்பப் பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப் படுகின்றது.

விமானம் மூலம் கொண்டு செல்லப்பட்ட அவர்களை அங்கேயே தொடர்ந்தும் தங்க வைப்பதற்கான சாத்தியங்கள் அதிகமுள்ளன என்று தொண்டு நிறுவனங்கள் தெரிவிக்கின்றன.

தற்கொலைக்கு முயன்ற ஐவரில் இருவர் கடந்த 12 திகதியும் மேலும் மூவர் 16 திகதியும தற்கொலைக்கு முன்றனர் என்று தெரிவிக் கப்படுகின்றது.

## அரசின் ......

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறையின் சுதந்திரம் தொடர்பில் வரலாறு காணாத நெருக்கடியை நாடு தற்போது எதிர்கொண்டுள்ளதோடு, இத்தகைய சூழ்நிலைக்கு எதிரான ஒரு ஒன்றிணைந்த வேலைத்திட்டத்தின் தொடக்கமாக இந்தக் கையொப்பமிடுதல் நிகழ்வு இடம்பெற்றது என்று ஐக்கிய மக்கள் சக்தியின் ஊடகப்பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

## புதிய அமைச்ச ...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) வருகின்றது.

அமைச்சரவையில் தமது தரப்பைச் சேர்ந்த மேலும் 10 பேரைச் சேர்க்க வேண்டும் என்பது மொட்டுக் கட்சியின் கோரிக்கையாகும்.

புதிய அமைச்சரவை மாற்றம் என்பது பல மாதங்களாகப் பேசப்பட்டு வருகின்றது. நாட்டின் தற்போதைய பொருளாதார நிலைமையில் புதிய அமைச்சரவையை நியமித்தால் மக்கள் அதிருப்தியடைவார்கள் என்பதால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அதை இழுத்தடித்தே வந்திருந்தார்.

பொருத்தமான தருணம் வரும் போதே அந்த நியமனத்தைச் செய்வதென்பது ஜனாதிபதியின் திட்டம். ஆனால், மொட்டுத் தரப்பு அமைச்சரவையில் தமது அணியைச் சேர்ந்த மேலும் 10 பேரை நியமிக்குமாறு தொடர்ச்சியாக ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுத்து வந்தது. இதோ நியமிக்கின்றேன், அதோ நியமிக்கின்றேன் என்று கூறி ஜனாதிபதி இழுத்தடித்தார்.

இறுதியாக 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் முடிவடைந்ததும் புதிய அமைச்சரவையை நியமிக்கின்றேன் என்று கூறி மொட்டுக்கட்சியினரை ஜனாதிபதி ஆறுதல்படுத்தினார்.

இறுதியில் அதுவும் நடக்கவில்லை. இதனால் மொட்டுக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி மீது கடும் அதிருப்தியில் இருந்தனர். ஆனால், சர்வதேச நாணய நிதியத்தின் கடன் கிடைத்த பின் புதிய அமைச்சரவை நியமிப்பதுதான் பொருத்தமானது என்று ஜனாதிபதி கருதினார் என்று இப்போது சொல்லப்படுகிறது.

அதன் அடிப்படையில் சர்வதேச நாணய நிதியக் கடன் தொகையின் முதல் தவணை கொடுப்பனவு தற்போது கிடைத்துள்ள நிலையில், புதிய அமைச்சரவையை நியமனத்துக்கு ஜனா திபதி ரணில் விக்கிரமசிங்க உத்தேசித்துள்ளார் என்று அவரது வட்டாரம் தெரிவிக்கின்றது.

## ரணிலை .....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) சந்திப்பில்க கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

''இலங்கைக்கு உதவி செய்ய வேண்டும் என்பதைச் சர்வதேசம் தற்போது ஏற்றுக் கொண்டுள்ளது. உதவி செய்வதன் ஊடாக நிலையான அபிவிருத்தியை நோக்கி இலங்கை பயணிக்கும் என்பதையும் சர்வதேசம் ஏற்றுக் கொண்டுள்ளது. ஆகவே நாம் ஜனாதிபதிக்கு நன்றி செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்'' என்றார் அவர்.

கேள்வி:- பசில் ராஜபக்ஷவின் பரிந்துரைக்கு அமையவா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சர்வதேச நாணய நிதியத்தை நாடினார்?

பதில்:- ஆம், சர்வதேச நாணய நிதியத்திடம் செல்லும் திட்டம் கோட்டாபய ராஜபக் தலைமையிலான ஆட்சி இருந்த காலத்திலிருந்தே முன்னெடுக்கப்பட்டது. எனினும் எம் மத்தியில் இருந்த காலை வாரிவிடும் சிலர் சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை தடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனாலும் சர்வதேச நாணயத்துக்கு சென்று விடயங்களை ஆற்றவல்ல ஒரேயொரு நபர் ரணில் விக்கிரமசிங்கவே என்ற யோசனையை பசில் ராஜபக்ஷ தான் முன்வைத்தார் என்பதை இங்கு நான் சுட்டிக் காட்டுகிறேன்.

கேள்வி:- ஜனாதிபதி ரணில் விக்கிரசிங்கவை நியமிப்பதற்கு பஷில் ராஜ பக்ஷவா பரிந்துரைத்தார்

பதில்:- ஆம் அவர்தான் பரிந்துரைத்தார்.

கேள்வி: அப்படியென்றால் பஷில் ராஜபக்ஷ அல்லவா பலமான நபர்?

பதில்: ஆம் அதில் என்ன சந்தேகம் உள்ளது?

## ஜனாதிபதி ....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஜனாதிபதி நாட்டை மீட்கும் செயற்பாட்டிற்கு எதிர்க்கட்சிகளை ஒன்றிணைந்து ஒத்துழைப்பு வழங்குமாறு கோரியிருக்கின்றார். எதிர்க்கட்சியை பொறுத்தமட்டில் சர்வதேச நாணய நிதியத்துடனான அணுகு முறைகள் தொடங்கப்பட்டது முதல் பல்வேறு விதமான ஒத்துழைப்புக்களை வழங்கியுள்ளது.

எதிக்கட்சி ஒத்துழைப்பு வழங்க முயற்சிகளை எடுத்தாலும் அதற்கு ஜனாதிபதியின் பக்கத்தில் இருக்கின்ற தரப்புகள் இடம் அளிப்பதில்லை. அவை ஓநாய்கள் போன்று ஓலமிட்டு தடைகளை ஏற்படுத்துகின்றன.

தற்போதைய நிலையில் சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர் மட்ட ஒப்பந்தம் நிறைவுக்கு வந்திருக்கிறது. அதேபோன்று பணிப்பாளர் சபையின் அனுமதி கிடைத்திருக்கிறது. இதற்காக அனைத்து பிரச்சினைகளும் தீர்ந்து விட்டது என்று கருத முடியாது. சர்வதேச நாணய நிதியத்துக்கு அனுப்பி வைக்க வேண்டிய கடன் உறுதிப்பாட்டு பதில் கடிதத்தில் ஜனாதிபதி கையொப்பமிடவில்லை. அவர் அந்தக் கடிதத்தை அனுப்பக்கூட இல்லை. அவ்வாறு அனுப்பி இருந்தால் நாடாளுமன்றத்தில் அந்தக் கடிதத்தை சமர்ப்பித்திருக்க வேண்டும் இங்கு மூன்று ஆவணங்கள் சமர்ப்பிக் கப்பட்டுள்ளன.

முதலாவது கடன் வழங்குனர்களுக்கான திறந்த கடிதம், இரண்டாவது 155 பக்கங்களை உடைய பிறிதொரு ஆவணம். மூன்றாவது வெளிநாட்டு கடன் வழங்குநர்களுடனான தொடர்பாடல் பதிவு. இந்த மூன்று ஆவணங்களையும் வைத்துக்கொண்டு விவாதிப் பதில் பயனில்லை. ஆகவே பதில் கடிதத்தினை சபைக்கு சமர்ப்பிக்குமாறு கேட்கின்றோம். அந்தக் கடிமில் லாது விட்டால் எந்தவொரு விடயங்களும் முன் னெடுக்கப் படாது - என்றார்.

## வடமாகாணத் ...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) தெரிவித்தது.

தற்போது பாடப்புத்தகங்களை அச்சிடுவதற்கான செலவினம் கடந்த காலங்களைவிட 4 மடங்காக அதிகரித்துள்ளமையால், ஏற்கனவே மாணவர்களால் பாவிக்கப்பட்ட 40 சதவீதமான புத்தகங்களை மீண்டும் வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றும் ஆளுநர் அலுவலகம் தெரிவித்தது.

மாணவர்களுக்காக வழங்கப்படவுள்ள இலவச சீருடைத் துணிகளில் 70 வீதமானவை சீன அரசினால் நன்கொடையாக அளிக்கப்பட்டுள்ளதோடு, 30 வீதமானவை உள்ளூர் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்வனவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## சுகாதார ....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) வட்டாரத்தில் பேசப்படுகின்றது.

இது தொடர்பில் அவரிடம் வினவியபோது அவர் அதனை ஒத்துக்கொண்டார்.

நல்லாட்சி என்று சொல்லப்பட்ட மைத்திரி - ரணில் ஆட்சியில் ராஜித சுகாதார அமைச்சராக இருந்தார்.

## அரச துறை ......

(முதலாம் பக்கம் தொடர்ச்சி) கட்டியெழுப்ப சேனநாயக்கவின் பாரம்பரியத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும். சுதந்திரப்பொருளாதாரத்தை உருவாக்குவதே எஸ்.சேனாநாயக்கவின் தொலைநோக்குப் பார்வையாக இருந்தது,

எமது நாட்டின் அரசியல்வாதிகள் இலங்கையை சிங்கப்பூராக மாற்றவேண்டும் என்று கனவு கண்டபோதும் கடந்த 75 வருடங்களில் சில அரசியல் இயக்கங்களின் தீர்மானங்களினால் இலங்கைக்கு ஏற்பட்ட அழிவுகள் எண்ணில் அடங்காதவை.

அரச துறை வியாபா ரம் மேற்கொண்டதால், கடந்த தசாப்தங்களில் மகாவலி போன்ற சுமார் 100 திட்டங்களை நிர்மாணிப் பதற்கான பணம் வீணடிக்கப்பட்டுள்ளது. எதிர் காலத்தில் அரச துறையானது வர்த்தகத்தில் இருந்து விலகி தனியார் துறைக்குத் திறந்துவிடப்பட்டு சுதந்திர மற்றும் உற்பத்திப் பொருளாதாரத்தை உருவாக்க நடவடிக்கை எடுக்கும்.

தனியார் துறையினரே வியாபாரம் செய்யவேண்டும். அவர்களிடமிருந்து பெறப்படும் வரி வருமானத்தில் நாட்டை அபிவிருத்தி செய்ய முடியும் - என்றார்.

# 10 ஆயிரம் பேருக்கு கிளிநொச்சியில் வேலை வாய்ப்பில்லை

## மாவட்டச் செயலர் கருத்து

கிளிநொச்சி மாவட்டத்தில் 10 ஆயிரத்துக்கு மேற்பட்டோர் வேலையற்று, தொழில் தேடுநர்களாக உள்ளனர் என கிளிநொச்சி மாவட்ட மேலதிகச் செயலாளர் சிறிமோகன் தெரிவித்தார். கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற தொழிற்சந்தை நிகழ்வை தொடங்கி வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள இளைஞர் யுவதிகளிற்கான தொழிற்பயிற்சி, உயர்கல்வி மற்றும் தொழில் வாய்ப்புக்களை பெற்றுக் கொள்வதற்கான மாவட்ட தொழிற்சந்தை புதன்கிழமை தொடங்கியது.

கல்வி அமைச்சின் திறண்கள் அபிவிருத்திப்பிரிவு மற்றும் மனிதவலு வேலைவாய்ப்புத் திணைக்களம் என்பவற்றுடன் இணைந்து கிளிநொச்சி மாவட்ட செயலகத்தினால் குறித்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொழில் தேடும் இளைஞர் யுவதிகளிற்கான ஆலோசனை வழிகாட்டல்களும், விற்பனை சந்தையும், கண்காட்சியும் இடம்பெற்றது.

பழைய மாவட்ட செயலக வளாகத்தில் காலை 9 மணியளவில் இடம்பெற்ற நிகழ்வில் கிளிநொச்சி மாவட்டச்செயலர் எஸ்.சிறிமோகன் பிரதம அதிதியாக கலந்துகொண்டார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

மனிதவலு வேலை வாய்ப் புத் திணைக்களத்தின் புள்ளி விவரத்திற்கு அமைவாக 2400க்கு மேற் பட்ட தொழில் தேடுனர்கள் இருக்கின்றார்கள். ஒரு லட்சத்து 46 ஆயிரம் சனத் தொகையில் இது சிறிய தொகையாக இருந்தாலும், எம்மிடம் பதிவு செய்யப்பட்ட தொகையாகவே அது காணப் படுகின்றது.

நாட்டமின்மை, விழிப்புணர்வின்மை காரணமாக இத்தொகை குறைவாகக் காணப்படலாம். ஆனால், என்னைப்பொறுத்தவரை, குறித்த தொகை 10 ஆயிரத்தை தாண்டியதாகவே இருக்கும். இந்தத் தொழிற்சந்தை அவர்களில் 200 பேருக்காவதுஸ விழிப்புணர்வு அல்லது திருப்புமுனையாக அமையும் என்பதற்கு மாற்று கருத்து இல்லை.

இந்த நாடு பொருளாதார சுமையிலிருந்து மீள்வதற்கு எங்களை நாங்களே சுயமாக நிறுத்திக்கொள்ள வேண்டிய தேவைப்பாடு இருக்கின்றது. அதற்காக உள்ளூரிலேயே எம்மை நிறுத்திக் கொள்ளக்கூடிய நிலைப்பாட்டுக்கும் நாங்கள் மாற வேண்டும் என்ற இரு நிலைப்பாட்டில் உள்ளோம்.

அரச வேலைவாய்ப்பு என்று சிந்திக்கின்ற மன நிலை மாறி, ஏனைய துறைகளுடனும் இணைந்து நாங்கள் செல்லவேண்டிய தேவை இருக்கின்றது. இதைவிட எமது படிப்பிற்கும் வேலைவாய்ப்புக்கும் தொடர்பில்லாத நிலையும் இங்கு இருக்கின்றது. அதை நிவர்த்தி செய்யும் வகையில் எமது கற்கைநெறிகள் அமைந்திருக்க வேண்டும். அதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமையும் என அவர் மேலும் தெரிவித்தார்.






## ஆசிரியர் .....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)
கோரிக்கையை பரிசீலித்து நீதிவான் இந்த உத்தரவைப் பிறப்பித்தார். போராட்டக்காரர்கள் பொது மக்களுக்கு அசௌகரியத்தை ஏற்படுத்தாத வகையில் போராட்டத்தில் ஈடுபடலாம் என்றும், எனினும் அவர்கள் வன்முறையில் ஈடுபட்டால் அல்லது சட்டவிரோதமாகச் செயற்பட்டால் தண்டனைச் சட்டப் பிரிவுகளின்படி பொலிஸார் நடவடிக்கை எடுக்கமுடியும் என்றும் நீதிவான் உத்தரவிட்டார்.

இந்த உத்தரவைத் தொடர்ந்து, கோட்டையில் கூடிய ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகள் மற்றும் ஆதரவாளர்கள் சுமார் ஒரு மணிநேரம் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பின்னர் கலைந்து சென்றனர்.

இந்த ஆர்ப்பாட்டம் வெறும் தொடக்கம்தான் என்றும், தமது கோரிக்கைகள் நிராகரிக்கப்படுமாக இருந்தால் ஆர்ப்பாட்டப் பேரணிகள் தொடரும் என்றும் போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள் ஆட்சியாளர்களுக்கு எச்சரிக்கை விடுத்தனர்.

## ஆட்டுத் தோல் ...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)
நாடு. அதனால் சர்வதேச நாணய நிதியத்துடன் செய்துகொண்டுள்ள ஒப்பந்தத்துக்கு ஆதரவளிக்குமாறு ஜனாதிபதி கேட்டவுடன் நாம் ஆதரவளித்துவிட முடியாது.

சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணைகள் தொடர்பாக நன்கு ஆராய்ந்து, இணங்க முடியுமான விடயங்களுக்கு எமது இணக்கப்பாட்டைத் தெரிவிப்போம். அதேநேரம் இனங்க முடியாத விடயங்கள் தொடர்பிலும் எமது நிலைப்பாட்டைத் தெரிவிப்போம்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்லும் வேலைத் திட்டம் 2018 காலத்தில் இருந்தது. அன்று ரணில் விக்ரமசிங்க பிரதமராக இருந்த ஆட்சியில் நாங்களும் அதன் பங்காளியாக இருந்தோம்.

ஆனால் கோட்டாபய ராஜபக்ஷவின் சௌபாக்கிய திட்டத்தின் மூலம் சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதைத் தடுத்தனர். சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை தேசத் துராகேம் என்றே பரப்புரை செய்துவந்தார்கள். ஆனால் இன்று சர்வதேச நாணய நிதியத்தின் பணத்தைப் பெற்றதற்காகப் பட்டாசு கொளுத்துகின்றனர்.

அதனால் அன்று சர்வதேச நாணய நிதியத்துக்குச் செல்வதை தடுத்தவர்களே தேசத் துரோகிகள் என்பதை ஜனாதிபதிக்கு தெரிவிக்கிறோம். அவர்கள்தான் ஓநாய்கள். தற்போது இந்த ஓநாய் கள் தற்காலிகமாக ஆட்டுத் தோலைப் போர்த்திக்கொண்டிருக்கின்றன. ஆட்டுத்தோல் போர்த்திய ஓநாய்கள் தற்போது ஜனாதிபதி எதைச் சொன்னாலும் அதற்கு கைதட்டி வருகின்றனர். அந்தளவுக்கு அடிமையாகி இருக்கின்றனர்.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் பிரேரணையுடன் இணங்குமாறு ஜனாதிபதி தெரிவிக்கிறார். இணங்க முடியுமான இடங்களில் நாங்கள் எமது ஆதரவை தெரிவிப்போம்.

சர்வதேச நாணய நிதியம், உலக வங்கி, ஆசிய அபிவிருத்தி வங்கி ஆகியவற்றின் பிரதிநிதிகள் என அனைவரையும் எதிர்க்கட்சி சந்தித்தபோது, எமது நாட்டுக்கு உதவி செய்யுமாறே நாங்கள் தெரிவித்தோம். சர்வதேச நாணய நிதியத்தின் பணம் தானாக வந்து விழவில்லை.

அதற்காக எதிர்க்கட்சியினால் செய்யவேண்டிய கடமையை முழுமையாக நாங்கள் செய்தோம். நாங்கள் துராகேம் செய்ததாகப் பொய் சொல்லக்கூடாது. அப்படியானதொரு காலமும் இருந்தது. அந்த மோசமான நடவடிக்கையை நாங்கள் மேற்கொள்ளப்போவதில்லை.

இந்நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களின் வாழ்க்கையோடு நாம் விளையாடவில்லை அவர்களின் வாழ்க்கையை சாவின் விளிம்புக்குக் கொண்டு செல்லச் செயற்படவில்லை .

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் மட்டக் குழுவுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தை வெளிப்படுத்துமாறு நாங்கள் பல தடவைகள் தெரிவித்தபோதும் அதனை வெளிப்படுத்தவில்லை. அன்று அதனை வெளிப்படுத்தி எம்முடன் கலந்துரையாடி இருந்தால். இந்த ஒப்பந்தத்தை மேலும் பலப்படுத்தி இருக்கலாம்.

எமது கருத்துக்களை பிரேரணைகளை முன்வைத்திருப்போம். நாடு வங்குரோத்து எனப் பிரகடனப்படுத்தி 5 மாதங்களுக்கு பின்னரே சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் மட்ட குழுவுடன் ஒப்பந்தத்துக்குச் செல்ல முடியுமாகி இருக்கிறது.

அதேபோன்று முதலாம் கட்டப் பணத்தைப் பெற்றுக் கொள்ள 10 மாதங்கள் கடந்துள்ளன. ஆட்சியாளர்கள் இதனை இழுத்தடித்துக் கொண்டு சென்றதே இதற்குக் காரணமாகும். அதனால் நாட்டு மக்களுக்கு அதிக நன்மை பயக்கும் ஒப்பந்தமாக இந்த ஒப்பந்தத்தை செய்ய முடியாமல் போயிருக்கிறது.

அத்துடன் சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்துக்கு கொள்கையளவில் நாங்கள் ஆதரவு. ஆனால் சாதாரண மக்களை நசுக்கும் வகையில் ஒப்பந்தம் செய்வதை நாங்கள் விரும்பவில்லை. 1965இல் இருந்து நாங்கள் 16 தடவைகள் சரவ்தேச நாணய நிதியத்துக்கு சென்றிருக்கிறோம். ஆனால் இந்தளவு மக்களை நசுக்கும் நிபந்தனைகள் அப்போதெல்லாம் விதிக்கப்படவில்லை.

நாட்டை கட்டியெழுப்ப சர்வதேச நாணய நிதியத்துக்கு செல்வதை தவிர வேறு வழி இல்லை என்ற விடயத்தில் ஜனாதிபதியுடன் இணங்குகிறோம். அத்துடன் சர்வதேச நாணய நிதியத்துக்கு எதிராக இருந்தவர்கள் ஆட்டுத்தோல் போர்த்திக்கொண்டாவது ஜனாதிபதியுடன் இணைந்து செயற்படுவதை வரவேற்கிறோம்.

எனவே எமது ஆட்சியில் மக்களுக்கு நன்மை பயக்கும் பிரேரணைகளை சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்பந்தத்தில் திருத்தம் மேற்கொள்வோம். சர்வதேச நாணய நிதியம் மாத்திரமல்ல, உலகவங்கி உட்பட அனைத்து நிறுவனங்களுடனும் நிமிர்ந்து கலந்துரையாடுவதற்குத் தகுதியான குழுவொன்று எமது கட்சியிலேயே இருக்கின்றது அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு மக்களை வாழச்செய்யும் எந்த ஒப்பந்தத்துக்குச் செல்வதற்கும் நாங்கள் தயார் என்றார்.

## வவுனியாவில் ....

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)
தொடரும்.-என்றனர்.

அண்மையில் கொழும்பில் இருந்து வந்திருந்த மின்சார சபை அதிகாரிகள் போராட்டக் கூடாரத்திற்கு அனுமதியின்றி மின்சாரம் பெற்ற குற்றச்சாட்டில் போராட்டக் குழுவின் தலைவியைக் கைது செய்து நீதிமன்றத்தில் நிறுத்தியிருந்தது.

## நாட்டை மீட்கும்...

(முதலாம் பக்கம் தொடர்ச்சி)
சதவீதமாக உயர்த்தத் திட்டமிட்டுள்ளோம்.

துறைவாரி வரிச் சலுகைகள் இல்லாமல் கூட்டிணைக்கப்பட்ட வருமான வரி விகிதம் இப்போது 30 சதவீதமாக உயர்த்தப்பட்டுள்ளது.

வட் வரியை 8 சதவீதத்தில் இருந்து 15 சதவீதமாக உயர்த்த நாம் நடவடிக்கை எடுத்தோம். வட் வரிக்கு அளிக்கப்பட்டுள்ள விலக்குகளை படிப்படியாகக் குறைக்கவும், வட் வரி திரும்ப செலுத்துவதை துரிதப்படுத்தவும், எஸ் - வட் முறையை நீக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2025இல் குறைந்தபட்ச வரி விலக்குடன், சொத்து வரி முறைக்குப் பதிலாக செல்வ வரியொன்றை விதிக் கவும், பரிசு மற்றும் பரம்பரைச் சொத்து வரியொன்றை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

### அரச செலவு முகாமைத்துவம்

முறையான செலவு முகாமைத்துவம் மூலம் அரச செலவினங்களுக்கான ஒதுக்கீட்டை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பண வீக்கத்திற்கு ஏற்ப, ஊதியங்கள் மற்றும் ஓய்வூதியங்களை சமநிலை செய்யவும் எதிர்பார்க்கப்படுகின்றது. ஆனால் முதன்மை வரவு செலவுத்திட்டக் கையிருப்பு வரம்பிற்குள் இந்த மாற்றங்கள் செய்யப்படும்.

### வலுசக்தி விலை நிர்ணயம்

எரிபொருளின் விலை நிர்ணயம் அரசியல் அதிகார மட்டத்தில் இருந்து முற்றாக நீக்கப்படும். 2018 விலை சூத்திரத்தின்படியே எரிபொருள் விலை தீர்மானிக்கப்படுகிறது.

எதிர்கால செலவு மதிப்பீட்டைக் கணக்கில்கொண்டு, 6 மாதங்களுக்கு ஒருமுறை மின்சார கட்டணத்தை மறுசீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

பெருமளவில் நஷ்டத்தை சந்தித்து வரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, ஸ்ரீலங்கா விமான சேவை, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம், இலங்கை மின்சார சபை போன்ற நிறுவனங்களின் இருப்பு நிலைகள் மறுசீரமைக்கப்படும்.

காலாவதியான இறையாண்மை பிணைகளின் பேரில் பெறப்பட்ட வெளிநாட்டுக் கடன் தொகையை இலங்கை அரசு செலுத்தவேண்டிய கடன் தொகையாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

### விலை நிலைத் தன்மை மற்றும் நிதிக் கொள்கை

பணவீக்க விகிதத்தை மீண்டும் 4 சதவீதம் மற்றும் 6 சதவீதத்துக்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை பணவீக்கத்தை கணிசமான அளவில் குறைக்க முடிந்துள்ளது. மேலும், 2023 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில், பணவீக்க விகிதத்தை ஒற்றை இலக்க மதிப்பிற்குக் குறைப்பது எங்கள் இலக்கு.

இந்தத் திட்டங்களை செயல்படுத்தும்போது, பணம் அச்சிடுவது படிப்படியாக குறைந்துவிடும். இதனால் வரவு-செலவுத்திட்டப் பற்றாக் குறையை ஈடுசெய்ய, கடன் பெற்றுக்கொள்ளாமல் வருமானத்தை ஈட்டிக்கொள்ள திறைசேரிக்கு நேரிடும்.

தற்போதுள்ள அந்நியச் செலாவணி, கட்டுப்பாடுகள் மற்றும் விதிமுறைகள் படிப்படியாக நீக்கப்பட்டு, அந்நியச் செலாவணி சந்தையின் செயல்பாடுகள், சந்தை அளவுகோல்களின் அடிப்படையில் தீர்மானிக்க அனுமதிக்கப்படும்.

தீர்மானிக்கப்பட்ட இலக்குகளின்படி, மத்திய வங்கி வெளிநாட்டு கையிருப்புகளை அதிகரிக்க வெளிநாட்டு நாணயம் கொள்வனவு செய்யப்படும்.

### நல்லாட்சி

உள்ளூர் நிபுணர்களின் கருத்துக்களை உள்வாங்கி, அரசின் பலவீனங்கள் குறித்து சர்வதேச நாணய நிதியம் (ஐஎம்எவ்) அறிக்கையொன்றைத் தயாரிக்கிறது. ஊழலைத் தடுப்பது தொடர்பாக அரசு மற்றும் நிறுவன கட்டமைப்பில் உள்ள குறைபாடுகளைக் கண்டறிய இதனால் வாய்ப்பு ஏற்படும்.

ஐ.நா. சாசனத்தின் பிரகாரம் ஊழல் எதிர்ப்புச் சட்டம் தயாரிக்கப்படும்.

இழந்த சொத்துக்களை மீட்பதற்கான ஏற்பாடுகளை 2024 ஆண்டு மார்ச் மாதத்திற்குள் சட்டக் கட்டமைப்பில் சேர்க்க எதிர்பார்க்கிறோம்.

வலுவான நிதிக் கொள்கைகளின் அடிப்படையில் புதிய அரச நிதி முகாமைத்துவச் சட்டம் உருவாக்கப்படும்.

சலுகை வரி அடிப்படையில் வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதி பெற்ற நபர்கள், வரிச்சலுகை, வரித் தீர்வைப் பெறும் நிறுவனங்களின் பட்டியல் பொதுமக்கள் தெரிந்துகொள்ளும் வகையில் பகிரங்கப்படுத்தப்படும். பெருமளவிலான பொது கொள்முதல் ஒப்பந்தங்களின் விவரங்களும் பகிரங்கப்படுத்தப்படும்.

### வளர்ச்சி

சர்வதேச நாணய நிதியத்துடன் தொடர்புடைய திட்டங்களிலுள்ள சீர்திருத்தங்கள் மூலம் நடுத்தர மற்றும் நீண்ட கால பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் திட்டமும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் வர்த்தகச் சீர்திருத்தங்கள் தொடர்பான செயற்பாடுகள், பெண் தொழிலாளர் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான நடவடிக்கைகள், திறன் மேம்பாடு, எரிசக்தி துறை மறுசீரமைப்பு என்பவற்றின் ஊடாக செயல்திறனின்மையையும் செலவினங்களையும் குறைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் மாற்றங்கள் தொடர்பிலும் இங்கு கவனத்தில் கொள்ளப்படுகின்றன.

### எதிர்கால நடவடிக்கை

சர்வதேச நாணய திட்டத்திற்கு அப்பால் சென்று, பல் பொருளாதார சீர்திருத்தங்களை எதிர்காலத் தில் அறிமுகப்படுத்த எதிர்பார்க்கிறோம். பொருளாதாரத்தைத் திறப்பதன் மூலமும், டிஜிட்டல் மயமாக்குவதன் மூலமும் நிலையான மறுமலர்ச்சியை அடைவதும், நடுத்தர மற்றும் நீண்ட கால உயர் பொருளாதார வளர்ச்சியை அடைவதும் இதன் நோக்கமாகும்.

### கடன் மறுசீரமைப்பு

அதேநேரத்தில், இருதரப்பு கடன்வழங்குநர்களுடன் பேச்சு தொடங்கப்படும். நாங்கள் இதுவரை கடைப்பிடித்து வந்த அதே நடைமுறைகளைப் பின்பற்றி அவர்களுடன் திறந்த மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் பேச்சுக்களை முன்னெடுப்போம்.

கடனைத் திருப்பிச் செலுத்துதல் தொடர்பில் ஏற்படுத்திக்கொண்ட விதிமுறைகள் குறித்து இறுதி முடிவுகளை எடுப்பதற்கு முன்னர், அனைத்து இருதரப்புக் கடன் வழங்குநர்களும் அதைப் பற்றித் தெரிந்துகொள்ளக்கூடிய வகையில் திறந்த முறையொன்றை பின்பற்றுகிறோம். ஏனைய வெளிநாட்டு கடன் வழங்குநர்களின் விடயத்திலும் இதே நடைமுறை பின்பற்றப்படும். அனைத்துக் கடன் வழங்குநர்களுக்கும் நியாயமான முறையில் மறுசீரமைப்பை மேற்கொள்வது எமது எதிர்பார்ப்பாகும்.

எமது உத்தியோகபூர்வ கடன் வழங்குநர்களுக்கு ஒரு பகிரங்க கடிதத்தை அனுப்பியதன் மூலம் நான் தெரிவித்ததுபோல், எந்தவொரு வழங்குநர்களுக்கும் கூடுதல் கரிசனை செலுத்துவதில்லை. அவர்கள் அனைவரையும் சமமாக நடத்துகின்றோம். நாங்கள் இதுவரை அவர்கள் அனைவருடனும் வெளிப்படையாகவும் நட்பாகவும் பணியாற்றினோம். எதிர்காலத்திலும் அவ்வாறே தொடர்ந்து பணியாற்றுவோம்.

எங்கள் கடன் நிலை குறித்து தொடர்ந்து அறிக்கைகள் வெளியிடப்படும். நாட்டின் கடன் பற்றிய எந்தத் தகவலும் மறைக்கப்படமாட்டாது.

### வரி மறுசீரமைப்பு

நாங்கள் கடினமான காலத்தைக் கடந்து வருகிறோம், வரிச்சுமையால் சமூகத்தின் ஒரு குறிப்பிட்ட பிரிவினர் கடுமையான அழுத்தத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதை நாம் அறிகின்றோம். பணவீக்கத்தால் ஒட்டுமொத்தச் சமூகமும் பாதிக்கப்பட்டுள்ளதையும் நாம் அறிவோம். ஆனால் இந்த நேரத்தில் நாம் தற்போது செயல்படுத்தி வரும் கொள்கைகளில் இருந்து விலகிச்செல்ல முடியாது. நாம் எதிர்கொள்ளும் கசப்பான உண்மை இதுவாகும்.

ஒவ்வொரு ஆறு மாதங்களுக்கு ஒரு முறை எங்கள் திட்டத்தை மறுபரிசீலனை செய்ய நாங்களும் சர்வதேச நாணய நிதியமும் நடவடிக்கை எடுப்போம். முதல் பரிசீலனை வரும் ஜூன் மாதம் நடைபெறும். தற்போதைய வரி முறையை திருத்துவது குறித்து ஏற்கனவே கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

திருத்தப்பட்ட முன்மொழிவுகளை திறைசேரி தயாரித்து வருகிறது. மேலும், பல்வேறு கல்வியாளர்கள் மற்றும் பொருளாதார நிபுணர்கள் இது தொடர்பான முன்மொழிவுகளை முன்வைத்துள்ளனர். அவர் கள் அனைவருடனும் கலந்துரையாட நாம் எதிர்பார்க்கின்றோம். அதன் பின்னரே பொதுவான உடன்பாட்டை நாம் எட்ட முடியும்.

ஜூன் மாத மதிப்பாய்வின் போது இந்த வரித் திருத்தங்களை எங்கள் திட்டத்தில் சேர்க்க சர்வதேச நாணய நிதியத்துடன் பேச்சு நடத்துவோம். அதுமட்டுமல்லாமல், காலத்திற்கேற்ப ஏனைய கொள்கை ரீதியிலான திருத்தங்கள் குறித்தும் நாம் ஆலோசிப்போம்.

இவை உணர்ச்சிகளாலும் போராட்டங்களாலும் தீர்க்கப்படக்கூடியவை அல்ல. இப்பிரச்சினைகள் விழிப்புணர்வோடும் அக்கறையோடும், புத்திசாலித்தனத்துடனும் தீர்க்கப்பட வேண்டும்.

### அர்ப்பணிப்பு தேவை

நாம் கடினமான காலங்களைக் கடந்து வருகிறோம். ஆனால் எங்களின் சிரமங்களும், துன்பங்களும் தற்காலிகமானவை. தற்போதைய முயற்சி மற்றும் அர்ப்பணிப்பின் பயனை விரைவில் நாம் பெறுவோம். நாளை நாட்டைக் கையேற்கும் இளைஞர்களுக்காக, நமது எதிர்காலச் சந்ததியினருக்காக இந்த அர்ப்பணிப்பை நாம் செய்யவேண்டும்.

இந்த ஒப்பந்தத்தின்படி அடுத்த நான்கு ஆண்டுகளுக்கு முறையான நிதி ஒழுக்கத்துடன் பொருளாதாரச் சீர்திருத்தங்களை அமுல்படுத்தினால், நாட்டின் எதிர்காலத்துக்கு வலுவான பொருளாதார அடித்தளம் உருவாகும். நாம் இந்தப் பாதையை விட்டு விலகினால், கடந்த ஏப்ரல் மாதத்தில் இருந்ததைவிட மோசமான நிலைக்கு நாடு தள்ளப்படும்.

சர்வதேச நாணய நிதிய ஒப்பந்தம் மீதான நாடாளுமன்ற விவாதத்திற்கான திகதியை மார்ச் மூன்றாவது வாரத்தில் நிர்ணயம் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளோம். இதன்போது உங்கள் கருத்துக்களையும் உங்கள் அனைவரின் ஆதரவையும் தருமாறு கௌரவ சபையில் கேட்டுக்கொள்கிறோம்.

### மற்றொரு தொடக்கம்

மற்றுமொரு முக்கியமான விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். சர்வதேச நாணய நிதிய உடன்படிக்கையில் மாத்திரம் நாங்கள் திருப்தி அடைய முடியாது. இது பயணத்தின் முடிவு அல்ல. இது மற்றொரு நீண்ட பயணத்தின் தொடக்கம் ஆகும். இப்போது நாம் நமது முயற்சியுடன் அந்த வழியில் செல்லவேண்டும்.

நாங்கள் எமது கடன் வழங்குநர்களுடன் பேச்சு நடத்தி கடனை மறுசீரமைக்க வேண்டும். அத்துடன் நாட்டின் வருமானத்தையும் அதிகரிக்கவேண்டும். உள்நாட்டு உற்பத்திகளை ஊக்குவிக்க வேண்டும். வெளிநாட்டு வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் வழிகளை உருவாக்கவேண்டும்.

உலக சந்தையில் மட்டுமின்றி நமது பிராந்திய சந்தையிலும் நமது பங்கை விரிவாக்கவேண்டும். பெரும் பொருளாதாரச் சீர்திருத்த செயல்முறையை அச்சமின்றி, தொடர்ந்து செயல்படுத்தவேண்டும்.

இவை அனைத்தும் எளிதான இலக்குகள் அல்ல. ஆனால் நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் இந்தப் பயணத்தைத் தொடர வேண்டும். இது கடினமானதொரு பயணம். அந்த கடினமான பயணத்தில் நாம் கவனமாகப் பயணிக்கவேண்டும்.

### ஒரே இலக்கு

நாட்டைக் கட்டியெழுப்புவதே எமது முதன்மையான குறிக்கோளாக இருக்க வேண்டும். முதலாவதாக, இரண்டாவது, மூன்றாவதாக, நாட்டைக் கட்டியெழுப்புவது மட்டுமே எங்களின் இலக்கு. அப்படிச் சிந்தித்தால் இந்தப் பாதையில் வேகமாக வும் வெற்றிகரமாகவும் பயணிக்கலாம்.

சர்வதேச நாயண நிதியத்துடன் நாங்கள் செய்த திட்டத்தை நான்கு ஆண்டுகளில் செயல்படுத்தி முடிக்கவேண்டும். ஆனால் நமது பலம் மற்றும் உறுதியைப் பொறுத்து மூன்றிலிருந்து மூன்றரை வருடங்களில் அதனை செய்து முடிக்கலாம். நாம் அதற்கு முயற்சிக்கலாம். இதற்காக கடினமாக உழைப்போம்.

### 4 முன்னுரிமை

இங்கே நாம் குறிப்பிட்ட சில விடயங்களுக்கு முன்னுரிமை வழங்கவேண்டும். முதலாவதாக, சமூகத்தின் கீழ்மட்டத்தில் உள்ள மக்களுக்கு வலுவான சமூகப் பாதுகாப்பு செயல்திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டும்.

இரண்டாவதாக, ரூபாயை வலுப்படுத்துவதற்கான உத்திகள் மற்றும் முறையான திட்டத்தை செயல்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, ஊழலுக்கு எதிரான சட்டங்களை உடனடியாக இயற்றி செயல்படுத்த வேண்டும். நீதியமைச்சர் இதற்கான சட்டமூலத்தை விரைவில் சமர்ப்பிப்பார்.

நான்காவதாக, சமூகத்தில் ஏற்படுத்த வேண்டிய ஏனைய கட்டமைப்பு சீர்திருத்தங்களில் கவனம் செலுத்தவேண்டும். அவற்றைக் கண்டறிந்து சீர்திருத்தங்களைத் தொடங்க வேண்டும்.

### புற்றுநோய்

டி.எஸ்.சேனநாயக்க பிரதமராக இருந்த காலத்தில் எமது நாடு வெளிநாட்டு கடன்கள் எதுவும் பெறவில்லை. பிற்காலத்தில் நம் நாட்டின் வருமானத்தில் செலவுகளை செய்யாமல், வெளிநாடுகளில் இருந்து கடன் வாங்கி நாட்டின் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரு பாரம்பரியம் உருவானது.

அந்தப் பாரம்பரியம், புற்று நோயாக மாறியதால் இன்று நாம் அனைவரும் அவதிப்பட்டு வருகிறோம். நாம் எல்லா நேரத்திலும் கடன் வாங்க முடியாது. கடன் பெறாத தேசமாக மாற நாம் பாடுபடவேண்டும். அதற் காகவே, இந்த இக்கட்டான காலத்திலிருந்து மீள்வதற்கு நாம் அனைவரும் ஒன்றிணைய வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இதுவரை நாம் எடுத்துள்ள அனைத்து கடன்களையும் நாம் செலுத்தி முடிக்கவேண்டும். இந்தப் பாதையில் நாம் சரியாகத் தொடர்ந்தால், அந்த நிலையை அடைய முடியும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

அந்தக் கடனைச் செலுத்திய பின்னர், நாட்டின் செலவினங்களைச் சமாளிக் கும் வருமானத்தை உருவாக்கும் வலிமையைப் பெறவேண்டும். முயன்றால் அதனை நம்மால் செய்யமுடியும். அந்த வழியை நாம் பின்பற்றினால், சுதந்திரம் அடைந்து 100 ஆண்டுகள் நிறைவடையும் 2048இல் நம் நாட்டை உலகில் அபிவிருத்தி அடைந்த நாடாக மாற்ற முடியும் - என்றார்.







# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## நீரின்றி அமையாது இவ்வுலகு

பங்குனி 21 உலக காடுகள் தினம். அதை அடுத்த நாளான பங்குனீ 22 அன்று உலக தண்ணீர் தினமாக கொண்டாடப்படுகிறது.' நீரின்றி அமையாது உலகு' என்றார் திருவள்ளுவர். இந்த உலகில் உள்ள எந்த உயிரினமும் நீர் இல்லாமல் வாழ முடியாது. உணவு இல்லாமால் நீண்ட நாள்கள் தாக்குப் பிடிக்கலாம் ஆனால் நீர் இல்லாமல் ஒரு சில நாள்களைக் கடத்துவதே பெரிது.

பூமிப்பரப்பின் 70% நீரால்தான் மூடப்பட்டுள்ளது. ஆனால், அவற்றைக் குடிக்க முடியாது ஏனெனில் அதில் பெரும் பகுதி கடல் நீர். உப்பு நீர். தண்ணீர் குடிப்பது என்றால் எந்த நீரையும் குடித்துவிட முடியாது. நன்னீராக இருந்தால்தான் அதைப் பருக முடியும்.

நன்னீர் என்று எடுத்துக்கொண்டால் பூமிப் பரப்பில் மொத்தமே 3% தான் உள்ளது. இந்த நன்னீரிலும் கிட்டத்தட்ட 65% பனிப்பாறைகளாக உறைந்துள்ளன. அதுபோக நதிகள், ஓடைகள், ஏரிகள் மற்றும் அணைகளில் 1% நன்னீர் தேங்கி நிற்கும். அது போக, நிலத்தடி நீராக 0.3% உள்ளது. அதிகப்படியான நன்னீர் இருக்கும் பனிப்பாறைகள் காலநிலை மாற்றத்தால் வேகமாக உருகி கடல் நீருடன் கலந்து வருகிறது. அதனால் மீதம் இருக்கும் நீரை காப்பாற்றிக்கொள்ளவேண்டிய தேவை அதி அவசியமாக மாறி வருகிறது.

நன்னீரின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், நன்னீர் வளங்களின் நிலையான மேலாண்மையை மேம்படுத்தவும் ஆண்டுதோறும் பங்குனி 22 அன்று உலக தண்ணீர் தினம் அனுசரிக்கப்படுகிறது. அதிகரித்து வரும் நீர் தேவையையும், அதை வீணாக்காமல் சரியாக பயன்படுத்தும் முறைகளையும் இந்த நாளில் ஆராய்ந்து மக்களுக்கு சொல்லி வருகின்றனர்.

உலக தண்ணீர் தினம் முதன்முதலில் 1992 ஆம் ஆண்டில் பிரேசிலின் ரியோ டி ஜெனிரோவில் நடந்த சுற்றுச்சூழல் மற்றும் மேம்பாட்டுக்கான ஐக்கிய நாடுகளின் மாநாட்டின் (ஷீஹிளீசிம்) போது முன்மொழியப்பட்டது. 1993 ஆம் ஆண்டு ஐ.நா. பங்குனி 22ஆம் திகதியை உலக நீர் தினமாக அறிவித்த பின்னர் இது முதன்முதலில் அனுசரிக்கப்பட்டது.

உலக தண்ணீர் தினம் நீரின் நிலையான மேலாண்மைக்கு தீர்வு காண்பதை நோக்கமாகக் கொண்டுள்ளது. வாழ்க்கைக்கு நீரின் முக்கியத்துவத்தையும், தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக இந்த விலைமதிப்பற்ற வளத்தை நிலையான முறையில் நிர்வகிக்க வேண்டியதன் அவசியத்தையும் வரும் சந்ததியினர் பயன்பாட்டிற்கு கொஞ்சம் விட்டுச்செல்லவேண்டும் என்ற எண்ணத்தையும் நமக்கு நினைவூட்டும் ஒரு நிகழ்வாக இது அமைகிறது.

நீரின் நிலையான மேலாண்மை என்பது தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினரின் நலனுக்காக உலகின் நீர் ஆதாரங்களை திறம்பட பயன்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் ஆகும்.

அதிலும் குடிதண்ணீர்த் தேவைக்காக நிலத்தடி நீரைப் பயன்படுத்துகின்றவர்கள் நீரின் நிலையான மேலாண்மையைப் பற்றி அறிந்தும் தெரிந்தும் வைத்திருப்பதும் அதனைப் பேணுவதும் அவசியம்.

# கிராஞ்சி கடலட்டைப் பண்ணைகள் அனைத்துக்கும் அனுமதி உண்டு

## கடற்றொழிலாளர் சங்கம் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

கிராஞ்சியில் சட்டவிரோத கடலட்டை பண்ணைகள் என்று எதுவும் இல்லை. அனைத்திற்கும் உரிய அனுமதிகள் பெறப்பட்டுள்ளன என்று

தெரிவிக்கிறது அங்குள்ள சிறிமுருகன் கடற்தொழிலாளர் சங்கம். திட்டமிட்ட வகையில் உள்நோக்கத்துடன் பொய்ப் பரப்புரைகளைச் சிலர் செய்கின்றனர் என்று சங்கத்தின் செயலாளர் த.மகேந்திரன் குற்றஞ்சாட்டியுள்ளார்.



யாழ்ப்பாணத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் தெரிவித்ததாவது:

கடலட்டை பண்ணைகள் தொடர்பாக பலரும் பலவிதமான கருத்துக்களைத் தொடர்ந்தும் கூறி வருகின்றனர். குறிப்பாகக் கடலட்டைப் பண்ணைகள் அமைப்பதால் கடற்தொழில் பாதிக்கப்படுவதாகவும் உரிய அனுமதிகள் பெறப்படாது சட்ட விரோதமான முறையிலையே இங்கு பண்ணைகள் அமைக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்படுகின்றன.

சட்டவிரோத கடலட்டை பண்ணைகள் என்று எதுவும் இங்கு இல்லை. உரிய முறையில் அனைத்து அனுமதிகளும் பெறப்பட்டிருக்கின்றன. அந்தந்தச் சங்கங்களின் அனுமதிகளைப்பெற்று சட்ட ரீதியாகவே கடலட்டைப் பண்ணைகள் அமைக்கப்பட்டுள்ளன என்பதை நாம் மீண்டும் மீண்டும் சொல்லிக் கொள்கிறோம்.

ஆனால் இந்த விடயத்தில் தெளிவு இல்லாதவர்களும் வேறு வேறு உள்நோக்கங்களைக்கொண்டவர்களும் திட்டமிட்ட வகையில் தொடர்ந்தும் பொய் பரப்புரைகளைச் செய்து வருகின்றனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறல்கள் உட்பட பல்வேறு வழிகளிலும் பாதிக்கப்பட்டிருந்த எங்களுக்கு கடலட்டைப்பண்ணை தொழிலில் ஈடுபடுவதற்கு நல்லதொரு சந்தர்ப்பம் கிடைத்துள்ளது. இதனால் எமக்கான வருமானமும் போதுமானதாகக் கிடைக்கிறது

உள்நோக்கங்களுக்காக, எமக்கு கிடைத்துள்ள வாய்ப்பை யாரும் குழப்ப வேண்டாம். எமது வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையிலான செயற்பாடுகளை நாங்கள் கண்டிக்கின்றோம்.

இதேவேளை இந்திய மீனவர்களின் அத்துமீறல்களால் நாம் தொடர்ந்தும் பாதிக்கப்பட்டு வருகின்றோம். இந் நிலையில் மன்னாரில் நடைபெறவுள்ள போராட்டத்திற்கு ஆதரவாக அதில் கலந்துகொள்ளவுள்ளோம் என்று அவர் மேலும் தெரிவிதாதார்.

# பதவியைத் தட்டில் வைத்துக் கொடுத்தபோது எதிர்க்கட்சியினர் ஏன் அதைப் பெறவில்லை?

## நாடாளுமன்றத்தில் கேட்டார் நிதி இராஜாங்க அமைச்சர்

நாட்டை மீட்டெடுப்பதற்கு எதிரணியில் உள்ள பொருளாதார நிபுணர்களுக்கு தட் டில் வைத்து பதவியை வழங்கியபோதும் அவர்கள் ஏன் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை என்று நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப் பிட்டிய நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.



நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேச நாணய நிதியம் தொடர்பான ஜனாதிபதியின் உரை மீதான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பெரும் போராட்டத்துக்கு மத்தியில் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தற்போது கிடைக்கப்பெற்றுள்ளது. ஶ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான ஆட்சி வரிச்சலுகை வழங்கியமை, விவசாய உரத்தைத் தடைசெய்தமை ஆகிய காரணிகளினால் பொருளாதார பாதிப்பு குறுகிய காலத்திற்குள் தீவிரமடைந்தது. தற்போது ஆட்சியாளர்கள் என்ற ரீதியில் ஒன்றிணைந்துள்ள காரணத்தால் உண்மையை மறைக்கமுடியாது.

கடந்த காலத்தைப் பற்றிக் கதைத்துக் கொண்டிருந்தால் எதிர்காலம் கேள்விக்குள்ளாக்கப்படும். ஆகவே தற்போதைய பொருளாதார நெருக்கடியில் இருந்து மீள்வதற்கு தூரநோக்குக் கொள்கையுடன் செயற்படவேண்டும். சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கு தொடக்கப் படிக்கல்லாக அமையும்.

இலங்கை 16 தடவைகள் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொண்டுள்ளது. பொருளாதார பாதிப்பு ஏற்படும் அறிகுறிகள் காணப்பட்ட பின்னணியில்தான் சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் 2020 ஆம் ஆண்டு பொருளாதார பாதிப்பு தீவிரமடைந்ததன் பின்னர், நாடு வங்குரோத்து என உத்தியோகப்பூர்வமாக அறிவிக்கப்பட்டதன் பின்னர்தான் சர்வதேச ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்வது தொடர்பான நிபந்தனை அறிக்கை நாடாளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. கடந்த காலங்களில் இவ்வாறு நிபந்தனை அறிக்கை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டதில்லை வங்குரோத்து நிலை அடைந்துள்ள பின்னணியில் வெளிப்படை தன்மையுடன் செயற்படவேண்டும் என்பதற்காக அறிக்கை நாடாளுமன்றத்திற்கு முழுமையாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை முழுமையாக பெற்றுக்கொள்ள அனைத்துத் தரப்பினரும் அரசியல் நோக்கமற்ற வகையில் செயற்படவேண்டும், ஆகவே நாடாளுமன்றத்தின் ஊடாக சிறந்த தீர்மானத்தை எடுக்க சகல எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

# சஜித்தால் ஒன்றரை ஆண்டுகள்கூட பதவியில் தாக்குப் பிடிக்கமுடியாது

## இப்படித் தாக்குகிறார் ஹரீன் பெர்னாண்டோ

மக்கள் ஆணை பெற்று சஜித் பிரேமதாச பதவிக்கு வந்தாலும் அவரால் ஒன்றரை ஆண்டுகள் கூட பதவியில் நீடிக்க முடியாத நிலைமை ஏற்படும் என்று அமைச்சர் ஹரீன் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இந்த விடயத்தைத் தான் சவால் விடுத்துக் கூறுகிறார் என்று குறிப்பிட்டவர், எதிர்க்கட்சியில் யாராவது விரும்பினால் தனுடன் பந்தயம் கட்ட முடியும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் புதன்கிழமை இடம்பெற்ற சர்வதேசநாணயநிதியக்கடன் தொடர்பிலான ஜனாதிபதியின் உரை மீதான சபை ஒத்திவைப்புவேளை விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

எதிர்க்கட்சித்தலைவருக்கு நாட்டை மீளக் கட்டியமைப்பதற்கான வாய்ப்புக்கள் பல கிட்டின. இருப்பினும் அவர் மக்கள் ஆணையுடன்தான் ஆட்சி பீடத்தில் அமர வேண்டுமென்ற குறுகிய மனோநிலையில்தான் இருந்தார். இதன் காரணமாக வந்த வாய்ப்புகள் அனைத்தும் அவரை விட்டுப் போயின.

இப்பொழுது எதிர்க்கட்சித் தலைவராக இருந்துகொண்டு எதிர்க் கட்சியையும் ஒற்றுமையாக வைத்துக்கொள்ள முடியாதவராக உள்ளார். எதிர்க்கட்சி, கூட்டமைப்பாக இருக்கிறது என்று கூறினாலும் கூட்டுக்குள் பல பிரச்சினைகள் உள்ளன.



சஜித் பிரேமதாசவினால் அந்த பிரச்சினைகளுக்குக் கூடத் தீர்வினை வழங்க முடியவில்லை. அவர் ஒருபோதும் தீர்வினை வழங்குபவர் அல்லர். அவர் பிரச்சினைகள் பற்றியே பேசிக் கொண்டிருக்கிறார். அவருக்கு தற்போயை நிலையில் எதிரணியை சமாளிப்பதே பெரிய விடயமாக உள்ளது.

இவ்வாறான நிலையில் அவர் நாட்டின் தலைமையை ஏற்றால் எப்படி இருக்கும். போராட்டங்களை நடத்தும் தொழிற்சங்கங்களுக்கு பல்வேறு விதமான வாக்குறுதிகளை அள்ளி வழங்குகிறார். ஆனால் அவர் அதியாசனத்தில் அமர்ந்த பிறகு அவரால் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது.

சஜித் பிரேமதாசவுக்கு மூளை இருக்குமாயின் அவர் தீர்க்கமான சிந்தித்து சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தவேண்டும். நான் சஜித் பிரேமதாசவின் இடத்தில் இருந்தால் முதலில் மறுசீரமைப்பு விடங்களை முன்னகார்த்தி ஆட்சிப்பொறுப்பினை கையில் எடுக்கலாம். ஆனால் மீண்டும் சர்ச்சைகளை உருவாக்கும்.

கோட்டாபய ராஜபக்ஷ இரண்டரை ஆண்டுகளாவது பதவியில் இருந்தார். சஜித் பிரேமதாசவால் ஒன்றரை ஆண்டுகள்கூடப் பதவியில் நீடிக்க முடியாது என்று நான் துணிவாகக் கூறுகிறேன்.

அதேநேரம் ரணில்விக்கிரமசிங்க எட்டு கடினமான பரீட்சையில் வெற்றிபெற்றுள்ளார். குறிப்பாகக் கூறுவதானால் மின்சாரம், எரிபொருள், உணவு பற்றாக்குறை, சர்வதேச நாணய நிதியதத்தின் கடன் வசதி, உள்ளிட்டவற்றை சுட்டிக்காட்டலாம் அவர் கடின முயற்சியில் இந்தத் தடைகளை எல்லாம் கடந்து இருக்கிறார் - என்றார்.

# மக்களால் புறக்கணிக்கப்பட்ட ரணில் அரச நிர்வாகத்தை நிர்வகிக்கின்றார்!



டிலான் பெரேரா சாட்டை

கொழும்பு, மார்ச் 23
மக்களால் புறக்கணிக்கப்பட்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நிறைவேற்றுத் துறையை மாத்திரமன்றி மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி சபைகளையும் ஆட்சி செய்கின்றார்.

பொருளாதாரம், ஜனநாயகம் ஆகிய இரண்டையும் பாதுகாக்கவேண்டியபொறுப்பு அரசாங்கத்துக்கு உண்டு என்பதை ஜனாதிபதி நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள், நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான விவாதத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

கிரிக்கெட் தொடரில் றோயல் கல்லாரி வெற்றியடைந்த போது அந்த அணியின் தலைவர் செய்ததை போன்று தானும் நாட்டுக்கு வெற்றியை ஏற்படுத்துவேன் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

ஆனால் றோயல் கல்லூரி தலைவர் சுற்றுப்போட்டியில் ஆயிரம் ஓட்டங்களை எடுத்து சிறப்பாக விளையாடியவர். ஆனால் ஜனாதிபதி அனைத்திலும் தோல்வியடைந்தவர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தல்களில் தோல்வியடைந்திருந்தாலும் சட்டவாக்கம், நிறைவேற்றுத் துறை, உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளையும் ஆட்சி செய்கின்றார்.

உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகளை அவர் ஆளுநர்கள் மற்றும் ஆணையாளர்கள் ஊடாக ஆட்சி புரிகின்றார். மாற்றத்தைக் கோரியவர்களுக்கு இறுதியில் கிடைத்தது என்ன?

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது என அரசாங்கம் பெருமிதம் கொள்கிறது. இந்த நிதியுதவி ஊடாக நாட்டு மக்களுக்கு பயன் கிடைக்கப்பெறுமாயின் அதனை முழுமையாக வரவேற்போம். ஆனால் இந்த நிதி உதவி ஊடாக மக்களுக்கு எந்த பயனும் கிடைக்கப் பெறா! மாறாக நாடு தொடர்ந்து கடன்சுமைக்குள் தள்ளப்படும். – என்றார்.



# கடற்றொழில் அபிவிருத்தியில் எகிப்து ஒத்துழைக்கத் தயார்

யாழ்ப்பாணம், மார்ச் 23
இலங்கையின் கடற்றொழில் சார்ந்த அபிவிருத்தியில் எகிப்தின் அனுபவங்களையும் ஒத்துழைப்புக்களையும் பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

இலங்கை மற்றும் மாலைதீவிற்கான எகிப்து தூதுவர் மாகட் மொஷ்லேவுக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போதே மேற்குறிப்பிடப்பட்ட விடயங்கள் பிரஸ்தாபிக்கப்பட்டன.

இதன்போது, கடற்றொழிலாளர்களுக்கும் கடலுணவு உற்பத்தியாளர்களுக்கும் உதவுவதற்கு தாம் விருப்பமாக இருப்பதாகத் தெரிவித்த எகிப்து தூதுவர், தமது நாட்டின் முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்ததுடன் விரைவில் வடமாகாணத்துக்குத் தான் வருகைதர எதிர்ப்பார்ப்பதாக வும் தெரிவித்தார்.

எகிப்து தூதுவரின் வடக்கிற்கான விஜயத்தை ஆர்வமுடன் எதிர்பார்த்திருப்பதாகத் தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, கடற்றொழில் மற்றும் நீர்வேளாண்மை சார்ந்து மேற்கொள்ளப்படுகின்ற திட்டங்களை எடுத்துரைத்ததுடன், வெளி நாடுகளின் அல்லது முதலீட்டாளர்களின் நிதியுதவி கிடைக்குமானால் ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ள பாரிய அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பாகவும் தெளிவுபடுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# நாட்டை வங்குரோத்து நிலைமைக்கு தள்ளியவர்களை அரசு தண்டிக்குமா?

## காவிந்த ஜயவர்தன கேள்வி



சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு பொருளாதார மீட்சிக்கு சாதகமாக அமையும் என்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறோம். பொருளாதார நெருக்கடியைத் தீவிரப்படுத்தி நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளிய தரப்பினருக்கு எதிராக இந்த அரசாங்கம் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்குமா என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் காவிந்த ஜயவர்தன ஆளும்தரப்பினிடம் கேள்வியெழுப்பினார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள் நிதி பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளைகள் மற்றும் நாடாளுமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான பிரேரணைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளதையிட்டு மகிழ்ச்சியடைய வேண்டும். பொருளாதாரப் பாதிப்பில் இருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு சிறந்த வழியாக அமையும். ஆகவே நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டுஎடுப்பதற்கு சர்வதேச நாணய நிதியம் வழங்கியுள்ள ஒத்துழைப்புக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்வதற்காக ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகள் என்ன? அதனால் நடுத்தர மக்களுக்கு ஏற்படும் பாதிப்புக்கள் என்ன? மற்றும் முகாமைத்துவ நடவடிக்கைகள் என்ன? என்பது தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டை வங்குரோத்து நிலைக்கு தள்ளி, இலங்கையை சர்வதேசத்தின் மத்தியில் மலினப்படுத்திய தரப்பினருக்கு எதிராக முன்னெடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன? கடந்த அரசாங்கம் உரம் தொடர்பில் எடுத்த தவறான தீர்மானம் பொருளாதாரப் பாதிப்புக்கு ஆரம்பபுள்ளியாக அமைந்தது.

அதிக விலை கொடுத்து உரத்தை பெற்றுக்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளார்கள். ஆனால் நெருக்கடிகளை ஏற்படுத்தியவர்கள் சுதந்திரமாக சுகபோகமாக வாழ்கிறார்கள். இவர்களுக்கு எதிராக இந்த அரசாங்கம் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை எடுக்குமா?

பொருளாதார மீட்சிக்கு அரசாங்கம் எடுக்கும் சிறந்த திட்டங்களுக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவோம். எதிர்க்கட்சி என்பதால் ஆளும் தரப்பின் பழக்கத்தை போல் அனைத்துக்கும் எதிர்ப்பு தெரிவிக்கப் போவதில்லை. அரசாங்கம் நாட்டு மக்களுக்கு உண்மையுடனும், வெளிப்படைத்தன்மையுடனும் செயற்பட வேண்டும். – என்றார்.




காலைக்கதிர் Kalaikkathir

# மீன் ஏற்றுமதி வருமானம் முறையாக நாட்டுக்கு கிடைப்பதை உறுதிசெய்க

## அமைச்சர் டக்ளஸ் கோரிக்கை





கடலுணவுகளின்ஏற்றுமதியின்மூலம்நாட்டுக்குகிடைக்கும் அந்நியசெலாவணிமுறையாக பேணப்படுவதில்லை என்று சுட்டிக்காட்டியுள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, நாடு பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்ளும் நிலையில் கடலுணவு ஏற்றுமதியின் மூலம் பெறப்படும் அந்நியச் செலாவணி முறையாக கிடைப்பதை உறுதி செய்வது மீன் ஏற்றுமதியாளர்களின் பொறுப்பாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

வெளிநாடுகளுக்கு கடலுணவுகளை ஏற்றுமதி செய்வோர் தற்போதைய நிலையில் எதிர்கொண்டுள்ள சவால்கள்மற்றும்ஏற்றுமதிசெய்யப்படும்கடலுணவுகளுக்கான வருமானம் தொடர்பாக கடற்றொழில் அமைச்சின் கேட்போர்கூடத்தில்நடைபெற்ற கலந்துரையாடலின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் கருத்துதெரிவித்தஅமைச்சர்

வெளிநாடுகளில்இருந்து மீன்களை வரவழைத்து மீள் ஏற்றுமதி செய்வதன் மூலம் உள்ளூர் மீன் தட்டுப்பாடு நிலவும் வேளையில் தமது தொழிலை சீராகப் பேண சந்தர்ப்பம் வழங்குமாறு ஏற்றுமதியாளர்கள் விடுத்த கோரிக்கையை கவனத்தில் எடுத்திருந்தார்.

அத்தோடு நாட்டை சுற்றி கடல்வளமும் நாட்டினுள் நீர் வேளாண்மைக்கு ஏதுவான சூழலும் நிறைந்திருக்கும் நிலையில், தேவையான கடலுணவுகளை நாமே உற்பத்தி செய்ய வேண்டும் என்பதே தன் எதிர்பார்ப்பாக இருப்பதாகத் தெரிவித்தார்.

எவ்வாறெனினும்,குறித்த கோரிக்கை தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடி முடிவெடுக்க வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

அதேபோன்று பல நாள் மீன்பிடிப் படகுகளின் உரிமையாளர்களுடன் கலந்துரையாடி, நியாயமான, நிலையான விலையை நிர்ணயித்துக்கொள்ளுமாறும் அமைச்சர்ஏற்றுமதியாளர்களிடம் கேட்டுக்கொண்டார்.

மேலும், பல நாள் கடற்றொழிலாளர்களின்மீன்பிடி கலன்களில்கடலுணவுகளைப் பாதுகாக்கும் பொருட்டு, தொழில்நுட்ப கருவிகளைப் பொருத்துவதற்குத்தேவையான ஒத்துழைப்பை வழங்குமாறு கடற்றொழில் அமைச்சர் ஏற்றுமதியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளார்.

இந்தக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க, கடற்றொழில்திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த உட்பட அமைச்சின் உயரதிகாரிகள் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கல்கிஸ்சை விபசார விடுதி சுற்றிவளைப்பு; 6 பேர் கைது

கல்கிஸ்சை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபசார விடுதி சுற்றிவளைக்கப்பட்டதில் 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ் குற்றப் புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைவாக கல்கிஸ்சை பிரதேசத்தில்மேற்கொள்ளப்பட்ட விசேட சுற்றிவளைப்பில் ஆயுர்வேத மருத்துவசேவை வழங்கும் நிலையம் என்ற போர்வையில் இயங்கி வந்த விபசார விடுதி இவ்வாறு சுற்றிவளைக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த நிலையத்தின் முகாமையாளர் உட்பட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் 20 முதல் 45 வயதுடைய வீரகெட்டிய, நீர்கொழும்பு, அம்பலாங்கொடை ஹாலி எல, பொலன்னறுவை மற்றும் கொழும்பு பிரதேசங்களை சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சந்தேக நபர்கள் அனைவரும் கல்கிஸ்சை நீதவான் நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டுள்ளனர். சம்பவம்தொடர்பில்கல்கிஸ்ஸபொலிஸார் மேலதிக விசாரணைகளைமுன்னெடுத்துள்ளனர்.

# நகுலேஸ்வரர் ஆலய குருக்கள் வீட்டில் பெருந் தொகை திருட்டு

யாழ்ப்பாணம் கீரிமலை நகுலேஸ்வர ஆலய பணம் சுமார் 30 லட்சம் ரூபா ஆலய குருக்கள் வீட்டில் இருந்து திருடப்பட்டுள்ளது.

ஆலய பணத்தை குருக்கள்வீட்டில்பாதுகாப்பாகவைத்திருந்த வேளை குருக்கள் மருத்துவ சிகிச்சைக்காக அண்மையில் கொழுப்பு சென்றுள்ளார்.

அந்நேரத்தில் வீட்டின் கூரையை பிரித்து உள் இறங்கிய கும்பல் ஒன்று குருக்கள் வீட்டில் இருந்த பணத்தை திருடி சென்றுள்ளது.

குருக்கள் கொழும்பில் இருந்து நேற்று (புதன்கிழமை) வீடு திரும்பிய போதே வீட்டின் கூரை பிரித்து வீட்டில் இருந்த ஆலய பணம் திருடப்பட்ட விடயத்தை அறிந்துள்ளார்.

அது தொடர்பில் காங்கேசன்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

# ஹெரோயினுடன் ஒருவர் வவுனியாவில் கைதானார்!

வவுனியா இறம்பைக்குளம் பகுதியில் 10 கிராம் 470 மில்லிகிராம் ஹெரோயினுடன் ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இறம்பைக்குளம் பகுதியில் குறித்த நபரை பரிசோதனைக்குட்படுத்திய போது அவரின் உடைமையில் 10 கிராம் 470 மில்லிகிராம் ஹெரோயின் கைப்பற்றுள்ளப்பட்டுள்ளதுடன் மேற்படி நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

வவுனியா தேக்கவத்தை பகுதியினை சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு கைது செய்யப்பட்டவராவர். சந்தேகநபரை வவுனியா மேல் நீதிமன்றில் ஆஜர் படுத்துவதற்குரிய நடவடிக்கையைப் பொலிஸார் முன்னெடுள்துள்ளனர்.

# மாணவி மீது வன்கொடுமை 23 வயது இளைஞன் கைது

கொழும்பில் உள்ள பெண்கள்பாடசாலைஒன்றில் கல்வி கற்கும் 17 வயதான மாணவியை பாலியல் துஷ்பிரயோகத்திற்குட்படுத்திய குற்றச்சாட்டில் 23 வயதுடைய நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபருடன்ஹோட்டல் அறையில் தங்கியிருந்த பதினேழு வயதுடைய மாணவியும் பொலிஸாரால் பொறுப்பேற்கப்பட்டார். கைது செய்யப்பட்ட சந்தேக நபர் வேலையில்லாத நபர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைக்குச் சென்ற தனது மகள் வீடு திரும்பவில்லை என மாணவியின் தாய்பொலிஸில்முறைப்பாடு செய்துள்ளார். தனது மகள் சுமார் ஆறு வருடங்களாக இளைஞர் ஒருவருடன்காதல் உறவில் ஈடுபட்டுள்ளார் என அவரதுதாய்கூறியதாகபொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பலமுறை எச்சரித்தும் மகள் உறவை நிறுத்தவில்லைஎனவும்அவர் பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

# ஞானக்காவின் வீட்டில் திருட்டு

அநுராதபுரத்தில்பிரசித்தி பெற்ற ஆலயம் ஒன்றை நடத்திவரும் ஞானக்கா என்ற பெண்ணின் வீட்டில் சுமார் 80 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் மற்றும் பணம் திருடப்பட்டமை தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார்விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஞானக்காவின் மகளின் கணவர் இந்தத் திருட்டுச்சம்பவம் தொடர்பாக அநுராதபுரம் தலைமையகப் பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளார்.

திருடப்பட்டபணம்மற்றும் தங்க நகைகளின் பெறுமதி சுமார் 80 லட்சத்து 50 ஆயிரம் ரூபா என அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இன்று (வியாழக்கிழமை) நடைபெறவுள்ள நண்பரின் திருமண நிகழ்வில் கலந்து கொள்வதற்காக கொழும்பு செல்வதாக தெரிவித்த அவர், மனைவியின் அலுமாரியில் இருந்த தங்க நகைகளை சோதனையிட்டபோது பணத்துடன் தங்க நகைகளும் காணாமல்போனதை அவதானித்தார் என அவர் தனது முறைப்பாட்டில் கூறியுள்ளார்.

# இரு இந்திய படகுகள் கைது

ந.லோகதயாளன்.

யாழ்ப்பாணம், மார்.23

யாழ்ப்பாணம நெடுந்தீவு கடற்பரப்பிற்குள் எல்லை தாண்டிய மீன்பிடியில் ஈடுபட்ட இரு இந்திய மீன்பிடிப் படகுகளுடன் 12 மீனவர்கள் கடற்படையினரால் பிடிக்கப்பட்டனர்.

தமிழகம் ஜெகதாப்பட்டினத்தைச் சேர்ந்த 12 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் இதுவரை காங்கேசன்துறைக்கு கொண்டுவரப்படவில்லை.

கொண்டு வரப்பட்டு சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

# மஹியங்கனையில் புதையல் தோண்டிய மூன்று பேர் கைது!

மஹியங்கனை, திவுலபெலஸ்ஸ பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் புதையல் தோண்டுவதற்கு முயன்ற மூவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

பொலிஸாருக்குக்கிடைக்கப்பெற்ற இரகசியதகவலுக்கு அமைவாக திவுலபெலஸ்ஸ, தல்தெனியாய பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பில்புதையல்தோண்டுவதற்கு முயற்சித்த மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 44, 55 மற்றும் 63 வயதுடையவர்கள் எனவும் அவர்கள் தல்தெனியாய மற்றும் கிராந்துருவன் கோட்டை பகுதியைச்சேர்ந்தவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது சந்தேக நபர்களிடமிருந்து புதையல் தோண்டுவதற்கு பயன்படுத்தப்படும் உபகரணங்கள் மீட்கப்பட்டுள்ளன.

சந்தேகநபர்கள் மஹியங்கனை நீதிவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் திவுலபெலஸ்ஸ பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.




## கேள்வி அறிவித்தல்
## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## கிளிநொச்சி வளாகம், அறிவியல் நகர்

கீழ்க்காணும் உணவகங்களை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் பணிமனையில் 10.04.2023 ஆம் திகதி மு.ப 10.00 மணிவரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| பொறியியற் பீடஉணவகம் | கிளிநொச்சிவளாகம் /அறிவியல் நகர் |
| விவசாயபீடஉணவகம் | கிளிநொச்சிவளாகம் /அறிவியல் நகர் |
| தொழிநுட்பபீடஉணவகம் | கிளிநொச்சிவளாகம் /அறிவியல் நகர் |
| விவசாயபீடபுதியஉணவகம் (Juice Canteen) | கிளிநொச்சிவளாகம் /அறிவியல் நகர் |
| ஆண்கள் விடுதிஉணவகம் | கிளிநொச்சிவளாகம் /அறிவியல் நகர் |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/= இனை மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் **9700 0006 0000 268** இற்கும், மீளளிக்கப்படாத கட்டணம் ரூபா 500/= இனை தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கணக்கு இலக்கம் **9700 0006 0000 276** இற்கும் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுகளினை சமர்ப்பித்து **கேள்விப் படிவங்களை இப்பல்கலைக்கழக பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். மேற்குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.** கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கிளிநொச்சி வளாக பிரதிப் பதிவாளர் அலுவலகத்தில் நேரடியாகவோ அல்லது தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 0212060180) பெற்றுக் கொள்ளலாம்.

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**
**22.03.2023**

# தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை வெட்டுப் புள்ளிகள் வெளியாகின!

ஐந்தாம் வகுப்பில் புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களை 6 ஆம் வகுப்பிற்கு பிரபல பாடசாலைகளில் சேர்ப்பதற்கானவெட்டுப்புள்ளிகள்வெளியாகியுள்ளன.

2022 இல் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான வெட்டுப்புள்ளிகளே இவ்வாறு வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய சிங்களம் மற்றும்தமிழ்மொழிமூங்களிலான பாடசாலைகளுக்கு வெள;வேறாக வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

இவற்றில் ஆகக் கூடிய புள்ளிகளாக கொழும்பு றோயல் கல்லூரிக்கு 182 வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன. கண்டி தர்மராஜ வித்தியாலயத்துக்கான வெட்டுப்புள்ளி 180 ஆகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

யாழ்.இந்துக்கல்லூரிக்கு 148 வெட்டுப்புள்ளியும், யாழ்.மத்திய கல்லூரிக்கு 144 வெட்டுப் புள்ளிகளும் வேட்ப஡ிமகளிர்உயர்தரப்பாடசாலைக்கு 154 புள்ளிகளும், வவுனியா றம்பைக்குளம் பெண்கள்பாடசாலைக்கு 143 புள்ளிகளும், மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரிக்கு 147 புள்ளிகளும், காத்தான்குடி மத்திய கல்லூரிக்கு 146 புள்ளிகளும், திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரிக்கு 142 புள்ளிகளும், திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரிக்கு 142 புள்ளிகளும்,முல்லைத்தீவு வித்தியானந்தாக்கல்லூரிக்கு 152புள்ளிகளும்,மூதூர்மத்திய கல்லூரிக்கு 151 புள்ளிகளும், வவுனியா தமிழ் மகா வித்தியாலயத்துக்கு 142 புள்ளிக ளும், மட்டக்களப்பு சென் மைக்கல் கல்லூரிக்கு 147 புள்ளிகளும், திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரிக்கு 142 புள்ளிகளும், மட்டக்களப்பு வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலைக்கு 152 புள்ளிகளும், மட்டக்களப்பு சிசிலியாஸ் மகளிர் பாடசாலைக்கு 144 புள்ளிகளும் -

தமிழ் மொழிமூல கலவன் பாடசாலைகளில் மத்திய மாகாணம் நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள ஹைலன்ஸ் கல்லூரிக்கே அதிகூடிய வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன. அதற்கமைய இக்கல்லூரிக்கான வெட்டுப்புள்ளி 163 ஆகும். மாவனல்லை சாஹிரா கல்லூ ரிக்கு 151 என வெட்டுப் புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் மொழி மூல ஆண்கள் பாடசாலையில் கொழும்புறோயல்கல்லூரிக்கு 170 , டி.எஸ்.சேனாநாயக்க கல்லூரிக்கு 161, இசிபத்தான கல்லூரிக்கு 158, ஓட்டமாவடி மத்திய கல்லூரிக்கு 155 மற்றும் ஹற்றன் புனித ஜோன் பொஸ்கோ கல்லூரிக்கு 155 எனவெட்டுப்புள்ளிகள்வெளியிடப்பட்டுள்ளன.

இதே போன்று தமிழ் மொழிமூலபெண்கள்பாடசாலைகளில் கொழும்பு - முஸ்லிம் மகளிர் கல்லூரிக்கு 162 வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.ஹற்றன்புனித கப்ரியல் மகளிர் கல்லூரிக்கு 147 என வெட்டுப்புள்ளிகள் வழங்கப்பட்டுள்ளன.

ஏனைய சகல பாடசாலைகளுக்குமான வெட்டுப் புள்ளிகளை கல்வி அமைச்சின்உத்தியோகபூர்வஇணையதளத்திற்குள் சென்று பார்வையிட முடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நாணய நிதியத்தின் திட்டத்துக்கு பொதுமக்கள் ஆதரவளிக்கவேண்டும்

## இலங்கை வர்த்தக சம்மேளனம் கோரிக்கை

கொழும்பு, மார்ச் 23
சர்வதேசநாணயநிதியத்தின்திட்டத்திற்குபொதுமக்கள் ஆதரவளிக்கவேண்டும்என இலங்கை வர்த்தக சம்மேளனம்வேண்டுகோள்விடுத்துள்ளது.

பொதுமக்கள், அரசியல் கட்சிகள், தொழில்சங்கங்கள், சிவில் சமூகத்தினர் இலங்கை தொடர்பான சர்வதேசநாணயநிதியத்தின் திட்டத்தை சாதகமாக பார்க்கவேண்டும். சீர்திருத்த நடவடிக்கைகளுக்கு ஆதரவளிக்கவேண்டும் என இலங்கை வர்த்தக சம்மேளனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

இலங்கையால்தொடர்ந்தும்மானியத்தைஅடிப்படையாககொண்டபொருளாதார முறைமையைத்தொடர்ந்தும் பேணமுடியாது எனத் தெரிவித்துள்ள இலங்கைவர்த்தக சம்மேளனம், அரசாங்கம் தான் உறுதியளித்துள்ள சீர்திருத்தங்களுக்கு முன்னுரிமை அளிக்கவேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளது.

பொருளாதாரத்துக்கு இது முக்கியமான தருணம் எனநாங்கள்கருதுகின்றோம் எனத் தெரிவித்துள்ள இலங்கை வர்த்தக சம்மேளனம், எப்போதோ முன்னெடுத்திருக்க வேண்டிய சீர்திருத்தங்களை முன்னெடுத்தால் அது நிலை யான பொருளாதார மறுமலர்ச்சிக்கு முக்கியமானஓர்உந்துதலாக காணப்படும் எனவும் குறிப்பிட்டுள்ளது.



The Family Members and Department of Biochemistry Cordially Invites

Dear Prof. / Dr. /Mr. / Ms. ........................................................................ to the

Memorial Lecture of

***Prof. Sandrasegarampillai Balakumar***

Professor in Biochemistry,
Former Dean, Faculty of Medicine,
Former Head, Department of Biochemistry.



## VENOM AND KIDNEY DISEASES

By

**Professor Ariaranee Gnanathasan**

MBBS, MD (Col), MPhil (Col), MRCP (UK), FRCP (Lon)
Senior Professor in Medicine,
Department of Clinical Medicine,
University of Colombo.

On Monday, **10th April 2023, at 03.00 PM**
At **Hoover Auditorium,**
Faculty of Medicine,
University of Jaffna.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.03.2023இல் வெளியிடப்பெற்றது.

நேற்றைய மாலைப்பதிப்பு பக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.


பக்கங்கள்: 05

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 04 வள்ளுவர் ஆண்டு 2054 பங்குனி 08 புதன்கிழமை 22.03.2023 கதிர் 05


## குவைத் பணியிலிருந்து 48 பேர் நாடு திரும்பினர்

### அங்கு சித்திரவதை அனுபவித்தவர்கள்

தொழிலுக்காகக்குவைத் சென்று பல்வேறு சிரமங் களை எதிர்நோக்கிய 48 இலங்கையர்கள் இன்றுநாடு திரும்பியுள்ளனர்.

38 பெண்களும், 10 ஆண்களுமே இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

ஸ்ரீ லங்கன் விமான சேவைக்குச் சொந்தமான யு.எல். 230 என்ற விமானத் தில் அதிகாலை அவர்கள் நாடு திரும்பினர்.

குவைத்துக்குத் தொழி லுக்குச் சென்று பல்வேறு சிரமங்களை 2

## இந்த வருடம் இதுவரை 260 பேர் பொலிஸிலிருந்து திடீர் விலகல்

### மன அழுத்தம், பணி அழுத்தம் காரணம்

இந்த வருடத்தின் இது-வரையான காலப்பகுதி யில் 260 பேர் பொலிஸ் சேவையில் இருந்து அறிவித்தல் எதனையும் வழங்காமல் விலகியுள்ள னர் என்று பொலிஸ் தலைமையக வட்டாரங் கள் தெரிவிக்கின்றன.

இவர்களில்பெரும்பாலா னோர் பொலிஸ் கான்ஸ்ட பிள்கள் மற்றும் சார்ஜன்ட் கள் என்றும் பொலிஸ் தலைமையக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இவர்களில் பலர் மன அழுத்தம், பொருளாதாரப் பிரச்சினைகள், 2



## தேர்தல் தொடர்பில் நாளை முக்கிய அறிவிப்பு



உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஏப்ரல் 25 2

## வெளிநாட்டுப் பயணத் தடை மஹிந்த - பஸிலுக்கு நீக்கம்

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச மற்றும் முன்னாள் நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச ஆகியோ ருக்கு எதிராக விதிக்கப்பட்ட வெளி நாட்டுப் பயணத் தடை இனி அமுலில் இல்லை என்று உயர் நீதிமன்றம் இன்று உத்தரவிட்டுள்ளது.

தற்போதைய பொருளாதார நெருக்கடிக்குக் காரணமானவர்கள் தொடர்பில் விசாரணை நடத்த உத்தர விடுமாறு கோரி தாக்கல் 2





## ஐ.எம்.எப். ஒப்பந்தம் குறித்து விவாதம் நடத்த கோரிக்கை

### சஜித் சபையில் இன்று விடுத்தார்



சர்வதேச நாணய நிதி யத்துடன் அரசு செய்துகொண்ட உடன்படிக்கை தொடர்பில் விவா தம் அவசியம் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ வலியுறுத்தினார். 2

## நீர்வீழ்ச்சியில் மாயமாகிய நால்வரதும் உடல்கள் மீட்பு



மொனராகலை - வெல்லவாய - எல்லாவல நீர்வீழ்ச்சியில் காணாமல் போன 4 இளைஞர்களின் சடலங்களும் மீட்கப்பட்டுள் ளன என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

செவ்வாய்க்கிழமை மாலை ஒருவரின் சடலம் மீட்கப்பட்ட நிலையில் ஏனைய மூவரினது சடலங்களும் இன்று காலை மீட்கப்பட்டன.

10 பேர் கொண்ட இளைஞர்கள் குழு ஒன்று, செவ்வாய்க்கிழமை முற்பகல் அங்கு நீராடச் சென்றபோது, அவர்களில் 4 பேர் நீரில் மூழ்கி காணாமல்போயிருந்தார்கள்.

கல்முனை, காத்தான்குடி மற்றும் சாய்ந்தமருது ஆகிய பிரதேசங்களைச் சேர்ந்த, 20 முதல் 22 வயதுக்குட்பட்ட இளைஞர்களே காணாமல் போயிருந்தார்கள்.

அவர்களைத் தேடும் பணிகளில் பொலிஸார், மீட் புப்படையினர் மற்றும் பொது மக்கள் ஈடுபட்டிருந்தனர்.

# நாணய நிதிய உடன்படிக்கையை அமுல்ப்படுத்த ஆதரவளியுங்கள்

## எதிர்க்கட்சிகளுக்கு ஜனாதிபதி அழைப்பு ஒத்துழைக்காவிட்டால் அடுத்த கட்டம் இல்லை

- எனது செயற்பாட்டை சர்வதேசம் ஏற்றுள்ளது
- மக்களின் நெருக்கடிகள் தற்காலிகமானவை
- நிதானமாகச் செயல்பட்ட மக்களுக்கு நன்றிகள்



நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் நோக்கில் அரசியல் வேறுபாடுகளைப் புறந்தள்ளி சர்வதேச நாணய நிதியத்தின் உடன்படிக்கையை நடைமுறைப்படுத்த ஆதரவளிக்கு மாறு ஜனாதிபதி ரணில் விக்ரம சிங்க எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த காலத்தை விமர்சிப்பது தனது பணியல்ல என்றும், நாட்டை கட்டியெழுப்புவதே தனது பணி எனவும் வலியுறுத்திய ஜனாதி பதி, கடந்த காலத் தவறுகள் மீண்டும் ஏற்படாத வகையில் சட்டதிட்டங்கள் மற்றும் பின்னணியை வகுத்து, எதிர் காலத்தைக் கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயல்படு வதாகவும் தெரிவித்தார். 2

## நல்லிணக்க மேற்பார்வைக் குழு தலைவராக டிலான் நியமனம்



நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவராக நாடா ளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா நாடாளுமன்றத்தில் தெரிவுசெய்யப்பட்டார்.

இவருடைய பெயரை நாடாளுமன்ற உறுப்பினர் கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல் முன்மொழிந்ததுடன், நாடாளுமன்ற உறுப்பினர் கெவிந்து குமாரதுங்க இதனை வழிமொழிந்தார்.

ஆளும் கட்சி உறுப்பின ரால் தனது பெயர் முன் மொழியப்பட்டு, எதிர்க்கட்சி உறுப்பினர் ஒருவரினால் வழிமொழியப்பட்டு குழுவின் தலைவராகத் தெரிவுசெய்-யப்பட்டமையையிட்டுத் தான் மகிழ்ச்சியடைவதாக டிலான் பெரேரா இங்கு குறிப்பிட் டார்.

நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரச மைப்பு மறுசீரமைப்பு அமைச்சு, தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்க அலுவ லகம், காணாமல்போன ஆட் கள்பற்றிய அலுவலகம், இழப் பீடுகள் பற்றிய அலுவலகம், சமூகத்தை அடிப்படையா கக் கொண்ட சீர்திருத்தத் திணைக்களம், அரச மொழிகள் 2

## ஆற்றில் மிதந்த சிசுவின் சடலம்



நுவரெலியா மாவட்டம், பொகவந்தலாவை, லொயினோன், ஆல்டி தோட்டங்களுக்கு இடையில் செல்லும் ஆற்றிலிருந்து சிசு ஒன்றின் சடலம் இன்று காலை மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித் தனர்.

பிறந்து ஒரு நாளேயான சிசுவின் சடலமே 2

## ஆளுநம், எதிர்த் தரப்பில் திருடர்கள் உள்ளனர்

### குமார வெல்கம அறிவிப்பு

ஆளும், தரப்பி லும் எதிர்த்தரப்பிலும் திருடர்கள் உள்ளனர் என்று நாடாளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தெரிவித்தார்.

நாடாளுமன்றத் தில் இன்று ஒழுங்குப் பிரச்சினையை எழுப் பியதன் பின்னர் கருத்து வெளியிட்ட அவர் தெரி வித்ததாவது:



சர்வதேச நாணய நிதி யத்தின் கடன் உதவியைப் பெற்றுக்கொண்டமைக்கு நான் நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரி விக்கின்றேன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிரணியின் ஆதரவினைக் கோரியுள் ளார். அவருடைய கோரிக் கையை ஏற்று எதிரணியில் உள்ள நான் ஆதரவு அளிப்ப தற்கு உள்ளேன் என்பதை இங்கு பகிரங்கமாகத் தெரி விக்கின்றேன்.

அதேநேரம், ஜனாதி பதி திருடர்களைப் பிடிப்பதற்கு நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறினார். இது வழமையாக எல்லாத் தலைவர்களாலும் கூறப்படுகின்றது. ஆனால் நடைமுறைப்படுத்தப்படுவ தில்லை.

ஆளும், தரப்பிலும், எதிர்த்தரப்பிலும் திருடர் கள் உள்ளார்கள். அவர் களை கைது செய்வதற்கு முடிந்தால் அதுவொரு கொடிபோன்று கைதுகள் தொடரும்.

ஆனால் திருடிய பணம் நாட்டில் இல்லை. ஆகவே இந்த விடயத்தில் இனியும் கருத்துக்களை வெளியிடாது செயற்பாடுகளையே முன்னெடுக்க வேண்டும் - என்றார்.

## 10 படகுகள் ஒரேயிரவில் தீயிட்டு எரித்து சாம்பல்

### நாகர்கோவிலில் காட்டுமிராண்டித்தனம்





(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் பருத்தித்துறை பொலிஸ் பிரிவில் நாகர்கோவில் மேற்கில் அன்டனி அருள் ராஜ் என்பவருக்குச் சொந்தமான இடத்தில் நிறுத்தி 2

## இலங்கை நெருக்கடியில் இருந்து மீள நாயண நிதிய கடன் உதவும்

### சீனா தனது வரவேற்பில் தெரிவிப்பு

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் உதவி, இலங்கை தனது நெருக்கடிக ளில் இருந்து மீள்வதற்கு உதவும் என்று சீன வெளிவிவகார அமைச்சின் பேச் சாளர் வாங் வென்பின் தெரிவித்தார்.

பீஜிங்கில் இன்று நடைபெற்ற வராந்த செய்தியாளர் மாநாட்டில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்த தாவது:

சர்வதேச நாணய நிதியம் தனது கடன் வசதியை இலங்கைக்கு வழங்குவதாக அறிவித்துள்ளமையானது சிறந்த செய்தி யாகும். இலங்கை நெருக்கடிகளிற்குத் தீர்வைக் காண்பதற்கும் அதிலிருந்து மீள்வதற்கும் குறித்த நீடித்த கடன் வசதி உதவி புரியுமென நாங்கள் கருதுகின்றோம்.

இலங்கை அரசு கடன் பிரச்சினை களிற்கு விரைவாகவும் சிறந்த 2

## நாணய.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியைப் பெற்றுக்கொள்வது தொடர்பில் இன்று காலை நாடாளுமன்றத்தில் விசேட உரை ஆற்றினார் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க. அப்போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் தெரிவித்ததாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் வசதியை எங்களால் பெற முடிந்தது என்பதை இந்த கௌரவ சபைக்கு உத்தியோகபூர்வமாக தெரிவித்துக் கொள்கிறேன். அரச நிதியின் அனைத்து அதிகாரங்களும் அரசமைப்பின் மூலம் நாடாளுமன்றத்திற்கு வழங்கப்பட்டுள்ளன. எனவே, இன்று நாணய நிதியத்தின் உடன்படிக்கை ஆவணத்தை சமர்ப்பித்து, இந்த நாடாளுமன்றத்தில் நாம் பெற்றுள்ள கடன் வசதி பற்றிய முதல் உத்தியோகபூர்வ அறிக்கையை இந்தச் சபையில் சமர்ப்பிக்கிறேன்.

பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு நாட்டையே ஜூலை 9 ஆம் திகதி நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இருந்த நாடு. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்த நாடு. வங்குரோத்தடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்த நாடு. பணவீக்கம் 73 சதவீதமாக உயர்ந்திருந்த நாடு. எரிபொருள், எரிவாயு வரிசையில் மக்கள் பல நாட்கள் அவதிப்பட்ட நாடு. பாடசாலைகள் மூடப்பட்ட நாடு. ஒரு நாளைக்கு பத்து – பன்னிரெண்டு மணி நேரம் மின்சாரம் தடைபட்டிருந்த நாடு.

விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலிருந்த நாடு. சட்டம் ஒழுங்கு பின்பற்றப்படாத நாடு. அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு, வெளியாட்கள் அதில் தடியேறியிருந்த நாடு. ஒவ்வொரு இடத்திலும் குண்டர்கள் தாக்குதல் நடத்திய நாடு. எதிர்தரப்பினரின் வீடுகளை எரிக்கும் நாடு. நெடுஞ்சாலையில் மக்கள் கொல்லப்பட்ட நாடு.

இவ்வாறான பின்னணியில் பொறுப்பை ஏற்க எவரும் விரும்பவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராத நிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

எந்த நிபந்தனையுமின்றி இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டேன். நாடாளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனக்கென்று உறுப்பினர்கள் யாரும் இருக்கவில்லை. ஆனால் இவை எதுவும் இல்லாவிட்டாலும், எனக்கு ஒரே ஒரு பலம் இருந்தது. நான் பிறந்து, வளர்ந்து, படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது. அந்த நம்பிக்கையை உறுதிப்படுத்தும் வகையில் எனக்குப் பல கடந்தகால அனுபவங்கள் இருந்தன.

2001இல், நாட்டின் பொருளாதாரம் மறைப் பெறுமானமாக வீழ்ச்சியடைந்திருந்தது. ஆனால் ஆட்சிப் பொறுப்பை ஏற்று 2 ஆண்டுகளுக்கும் குறைவான காலத்திலேயே நாட்டின் பொருளாதாரத்தை சரியான பாதையில் கொண்டு வர என்னால் முடிந்தது. அதுமட்டுமல்லாமல், டோக்கியோ உதவி மாநாட்டின் மூலம் 4 பில்லியன் அமெரிக்க டொலர் உதவியை என்னால் பெற முடிந்தது.

துரதிர்ஷ்டவசமாக, அதன் பின்னர் ஆட்சியைப் பொறுப்பேற்றவர்கள் அந்தப் பணத்தை சரியாகப் பயன்படுத்தவில்லை. 2015இல் நான் பொருளாதாரத்தை பொறுப்பேற்றபோது அது பலவீனமான நிலையில் இருந்தது. ஆனால், 2018இல், பட்ஜெட்டில் முதன்மையான மேலதிகத்தை எட்ட முடிந்தது. பல்வேறு சலுகைகளை வழங்கியதுடன் சுமார் 106 சதவீதம் சம்பளத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுத்தோம்.

இந்தகட கடுமையான சவாலை ஏற்கும்போது, கடந்த கால அனுபவங்கள் மூலம் பெற்ற நம்பிக்கை மட்டுமே எனக்கு இருந்தது. நான் வீழ்ந்தாலும் நாடு வீழாது என்ற எண்ணத்தில் சவாலை ஏற்றுக்கொண்டேன்.

சர்வதேச நாணய நிதியத்தின் உடன் படிக்கையுடன், இளைஞர்களின் எதிர்காலத்தை கட்டியெழுப்ப எங்களுக்கு ஒரு பாதை திறக்கப்பட்டுள்ளது. மீண்டும் எமது தாய்நாட்டை கட்டியெழுப்புவதற்கான வாய்ப்புகள் உருவாகியுள்ளன.

இந்த கடன் வசதியின் கீழ், 4 ஆண்டுகளில் சுமார் மூன்று பில்லியன் அமெரிக்க டொலர்கள் உதவியைப் பெறுவோம். அதன் முதல் தவணையின் கீழ் 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைக்கிறது. உலக வங்கி மற்றும் ஏனைய கடன் வழங்குபவர்களிடமிருந்து மேலும் 7 பில்லியன் டொலர் துரித கடன் உதவியை நாங்கள் எதிர்பார்க்கிறோம்.

நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் வசதியை நெருப்பு வட்டியுடன் கூடிய மற்றொரு கடன் என்று சிலர் விபரிக்கிறார்கள். இந்தப் பணத்தில் நாட்டின் முழுக் கடனையும் அடைக்க முடியாது என்று கூக்குரலிடுபவர்களும் இருக்கிறார்கள். இத்தகைய கருத்துக்கள் அவர்களின் அறியாமையையே காட்டுகிறது. அல்லது அப்பாவி மக்களை பொய் சொல்லி ஏமாற்றி அரசியல் ஆதாயங்களை பெற்றுக்கொள்ள அவர்கள் முயற்சிக்கிறார்கள்.

நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட கடன் என்பது வீழ்ந்த நாட்டை மீட்டெடுக்க வழங்கப்படும் வசதியாகும். அதற்கான தளமும் தயார் செய்யப்பட்டுள்ளது. இந்த வசதி மூலம் மீண்டும் சர்வதேச அங்கீகாரம் கிடைத்துள்ளது. இலங்கை இனி வங்குரோத்தடைந்த நாடாக இருக்காது என்பதற்கு உத்தரவாதம் கிடைத்துள்ளது. எமது உள்நாட்டு வங்கிகளுக்கு சர்வதேசத்தின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. சர்வதேச நிதி நிறுவனங்கள் எங்கள் கடன் பத்திரங்களை மதிக்கின்றன.

ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து மிகக் குறைந்த வட்டியில் கடன் உதவி பெறுவதற்கான பின்னணி உருவாக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மீண்டும் இலங்கை மீது நம்பிக்கை வைப்பர். பரந்த அளவிலான சர்வதேச வாய்ப்புகளுக்கான கதவுகள் எங்களுக்காக திறக்கப்படும். வலுவான புதிய பொருளாதாரத்தை உருவாக்குவதற்கான அடித்தளம் தயாராகி வருகிறது.

அது மட்டுமின்றி, இந்த உடன்படிக்கையின் மூலம் நமது நாட்டின் நிதி ஒழுங்கு சட்டமாக்கப்படும். ஊழலைத் தடுக்க புதிய கடுமையான சட்ட திட்டங்கள் அறிமுகப்படுத்தப்படும். இதன் மூலம் இலங்கையில் இதுவரை இல்லாத புதிய நிதிக் கலாசாரம் மற்றும் ஊழல் அற்ற சூழல் உருவாக்கப்படும்.

எமது நாட்டைப் பற்றி சர்வதேச நாணய நிதியம் முடிவெடுக்கும் முன்னரே நாட்டை முழுமையாக முடக்கச் சிலர் முயற்சித்தனர். இடைவிடா வேலை நிறுத்தத்தை முன்னெடுத்து, பொருளாதாரத்தை சீரழித்து நாட்டை அராஜகமாக்க திட்டமிட்டனர். நாசவேலை மூலம் நாணய நிதியத்தின் ஒத்துழைப்பை தடுக்கலாம் என்று நினைத்தனர். சில அரசியல் குழுக்கள், சில தொழிற்சங்கங்கள், சில ஊடகங்கள் இதற்காகக் கடினமாக உழைத்தன. நாடு உறுதியான நிலையில் இல்லை என்பதால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்றும் கூறினர்.

உள்ளூராட்சித் தேர்தல் நடத்தப்படாததால் சர்வதேச நாணய நிதியத்தின் உதவி கிடைக்காது என்று கூறினர். இப்படியான பொய்களைப் பரப்பி நாட்டு மக்களை வீதிக்கு இறக்க முயற்சித்தனர். எனினும், இந்த நாசகார செயற்பாடுகளை பெரும்பான்மையான மக்கள் ஆதரிக்கவில்லை, தனிப்பட்ட அரசியல் அதிகார நோக்கங்களுக்காக நாட்டின் முன்னேற்றத்திற்கு குந்தகம் விளைவிக்க பெரும்பான்மையான மக்கள் விரும்பவில்லை,

அவர்கள் நாட்டுக்காக பொறுப்புணர்வோடு செயற்பட்டனர். பல்வேறு சிரமங்களுக்கும் அழுத்தங்களுக்கும் மத்தியில், அவை அனைத்தையும் சகித்துக்கொண்டு, துன்ப, துயரங்களைத் தாங்கிக் கொண்டு நிதானமாகவும், பொறுமையாகவும் பெரும்பான்மையான மக்கள் செயற்பட்டனர். சர்வதேச நாணய நிதியத்தின் ஒப்புதலைப் பெறுவதற்கு அவர்களின் அர்ப்பணிப்பு பெரும் பலமாக இருந்தது. எனவே முதலில் இந்நாட்டு மக்களுக்கு எனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விடயத்தில் எங்கள் அதிகாரிகள் இரவு பகலாகக் கடுமையாக உழைத்தனர். சிலர் அச்சுறுத்தல்களை எதிர்கொண்டனர். அமைச்சர்கள் அர்ப்பணிப்புடன் செயல்பட்டனர். இச்சபையின் உறுப்பினர்கள் பலர் அதற்கு ஆதரவளித்தனர். சிலர் பகிரங்கமாகவும் பலர் இரகசியமாகவும் ஆதரவளித்தனர். அவர்கள் அனைவருக்கும் நான் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த நீடிக்கப்பட்ட கடன் வசதியைப் பெறுவதற்கு எங்களின் முக்கிய கடன் வழங்குநர்கள் எங்களுக்கு ஆதரவளித்தனர். வெளிநாடுகளும் சர்வதேச அமைப்புகளும் எங்களுக்கு ஆதரவளித்தன. வெளிநாட்டு அரச தலைவர்கள், அமைச்சர்கள், சர்வதேச அமைப்புகளின் அதிகாரிகள், பிரதிநிதிகள், வெளிநாட்டு இராஜதந்திரிகள், அதிகாரிகள் என பலரும் எங்களுக்கு உதவினார்கள். அவர்கள் அனைவருக்கும் இலங்கையின் மரியாதைக்குரிய நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

நாம் ஒரு புதிய பயணத்தைத் தொடங்குகிறோம், மேலும் பல பொருளாதார சீர்திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியுள்ளது. இங்குதான் நமது வெற்றிக்கான அடிப்படை இருக்கிறது. இவற்றில் சில மறுசீரமைப்புகளை, 2022 இடைக்கால வரவு செலவுத் திட்டம் மற்றும் 2023 வரவுசெலவுத்திட்டங்களில் முன்மொழிந்து ஏற்கனவே செயல்படுத்தி வருகிறோம். நாங்கள் இன்னும் பல மறுசீரமைப்புகளை அறிமுகப்படுத்துவோம்

இங்கு இன்னுமொரு விடயத்தை உங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். தேரவாத பௌத்த நாடுகள் எப்போதும் பொருளாதாரத்தில் ஏழ்மை நிலையில் உள்ளதாக சமீபத்தில், ஒரு கருத்து வெளியிடப்பட்டது.

இப்போது தாய்லாந்து இந்த கருத்தை உடைக்க போராடுகிறது. உலகின் தேரவாத மையமாகக் கருதப்படும் நாமும் அந்தக் கருத்தை தகர்த்தெறிய பாடுபடவேண்டும். ஒரு தாயின் பிள்ளைகளாகிய நாம் ஒருமனதாக முயற்சி செய்தால் அந்தக் கருத்தை உடைக்க முடியும். உலகின் பொருளாதார மையமாக இலங்கையை மீண்டும் பிரபலமாக்க முடியும்.

நான் முதலில், பிரதமராக பதவியேற்றபோது, நாட்டின் பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்பும் நடவடிக்கையில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கோரினேன். ஆனால் எனக்கு அந்த ஆதரவு கிடைக்கவில்லை. அதன் பின்னர் நான் ஜனாதிபதியாக நாடாளுமன்றத்தில் உரையாற்றியபோதும், எதிர்க்கட்சிகளின் ஆதரவை கோரினேன். ஆனால் கிடைக்கவில்லை. வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது எதிர்க்கட்சிகளின் ஆதரவையும் கேட்டேன். எந்த ஆதரவும் கிடைக்கவில்லை.

தற்போதைய நாடாளுமன்ற அமர்வின் தொடக்கத்தில் எதிர்க்கட்சிகளின் ஆதரவைக் கேட்டேன். ஆனால் எந்த ஆதரவும் கிடைக்கவில்லை. அந்தச் சந்தர்ப்பங்களில், அவர்கள் பல்வேறு காரணங்களைக் கூறி ஆதரவளிக்க மறுத்துவிட்டனர். எனது நியமனம் அரசமைப்புக்கு எதிரானது என்றார்கள்.

தேசிய பட்டியலிலிருந்து பிரதமரை நியமிக்க முடியாது எனக் கூறினார்கள். பொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டைக் காப்பாற்றுவதல்ல, ராஜபக்க்களைக் காப்பாற்றுவதே எனது நோக்கம் என்றார்கள். கடினமான தடையைக் கடக்கப்போவது இலங்கை அன்னை அல்ல நாமல் ராஜபக்ஷ தான் என்றார்கள்.

ஆனால், இலங்கை அன்னையை பொருளாதார தொங்கு பாலத்தைக் கடக்கச் செய்ய நான் பாடுபட்டுள்ளதை சர்வதேச சமூகம் தற்போது ஏற்றுக்கொண்டுள்ளது. எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுகளில் உண்மையில்லை என்பது தற்போது உறுதியாகியுள்ளது.

எதிர்தரப்பு குற்றச்சாட்டுகளுக்கு நான் பதில் சொல்லப் போவதில்லை. கடந்த காலத்தை விமர்சிப்பது என் வேலையல்ல. எதிர்காலத்தை உருவாக்குவதே எனது பணி. கடந்த கால தவறுகள் மீண்டும் நிகழாத வகையில் சட்டங்களையும் விதிகளையும் மற்றும் பின்னணியையும் ஏற்படுத்தி, எதிர்காலத்தை உருவாக்கவே முயற்சிக்கின்றேன். இதற்காக அர்ப்பணிப்பேன். செயற்படுவேன்.

இந்த நாட்டை கட்டியெழுப்பும் பணிகளில் இணைந்து கொள்ளுமாறு இன்றும் எதிர்க்கட்சிகளிடம் கேட்டுக்கொள்கிறேன். உங்களுடன் நான் வாதிடவில்லை. என்னை விமர்சித்தபோது அதற்கு பதிலளிக்க முயற்சிக்கவில்லை. எதிர்க்கட்சிகளின் ஆதரவு தேவை என்பதால் அப்படிச் செய்யவில்லை. உங்கள் அரசியல் கருத்துக்களை ஒதுக்கி வைக்கவும். உங்கள் அதிகாரம் குறித்து சிந்திக்கும் முன், நாட்டைப் பலப்படுத்துவது பற்றி சிந்தியுங்கள்.

ஏனைய அரசியல் கருத்துக்களில் சம்பிரதாயமான முறையில் செயற்படுங்கள். ஆனால் நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் முயற்சியில், நிலையான அரசியல் கட்டமைப்பிலிருந்து வெளியே வாருங்கள். பொருளாதாரத்தை உயர்த்த இந்த முயற்சிக்கு ஆதரவு தாருங்கள். ஏனைய விடயங்களின் போது நாம் எதிரணியில் நிற்கலாம். ஆனால் இந்தப் பணிகளின் போது, நாம் அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும். மீண்டும் அந்தக் கோரிக்கையை வைக்கிறேன்.

நாட்டின் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப நாணய நிதிய உடன்படிக்கையை செயல்படுத்த தற்போதேனும் உங்கள் ஆதரவை வழங்கவும். இந்தப் பணியில் அனைவரும் கைகோர்ப்போம் –என்றார்.

## தேர்தல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
நடத்த முடியுமா இல்லையா? என்பது குறித்து இறுதித் தீர்மானத்தை எட்டுவதற்காக நாளை வியாழக்கிழமை தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளதாக அதன் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்

இதற்காகச் சகல அரசியல் கட்சிகளின் செயலாளர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்றும் தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் தெரிவித்தார்.

## இந்த வருடம்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
அதிக வேலை மற்றும் கடமையின் அழுத்தம், ஓய்வின்மை போன்ற காரணங்களால் பொலிஸ் சேவையை விட்டு விலகியுள்ளனர் என்றும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், இவர்கள் அனைவரையும் முறைப்படி அறிவித்தல் வழங்கி பொலிஸ் சேவையை விட்டு வெளியேறுமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கடந்த வருடம் (2022) மாத்திரம் 900 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பொலிஸ் சேவையிலிருந்து விலகிச் சென்றுள்ளனர்.

## வெளிநாட்டு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
செய்யப்பட்ட அடிப்படை உரிமை மனு இன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்ட போதே, பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தலைமையிலான ஐவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர்கள் ஆயம் இந்த உத்தரவைப் பிறப்பித்துள்ளது.

மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள மஹிந்த ராஜபக்ச மற்றும் பஸில் ராஜபக்ச ஆகியோர் சார்பில் முன்னிலையான ஜனாதிபதி சட்டத்தரணி நவீன் மாரப்பன, நீதிமன்றில் முன்னிலையாகி சமர்ப்பணங்களை முன்வைத்து, கடந்த ஒக்டோபர் 7ஆம் திகதிக்குப் பின்னர் தமது சேவைபெறுநர்களுக்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை உத்தரவை உயர் நீதிமன்றம் நீடிக்கவில்லை என்று சுட்டிக்காட்டினார்.

இதைக் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்கு அறிவித்து உத்தரவு பிறப்பிக்குமாறு ஜனாதிபதி சட்டத்தரண நீதிமன்றில் கோரிக்கை விடுத்தார்.

இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்ட உயர் நீதிமன்றம், பிரதிவாதிகள் இருவருக்கும் விதிக்கப்பட்ட வெளிநாட்டுப் பயணத் தடை இனி அமுலில் இல்லை என்பதைக் குடிவரவு மற்றும் குடியகல்வுக் கட்டுப்பாட்டாளருக்குத் தெரிவிக்குமாறு உயர் நீதிமன்றப் பதிவாளருக்கு உத்தரவிட்டது.

## குவைத்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
எதிர்கொண்ட அவர்கள், குவைத்துக் கான இலங்கைத் தூதரகத்துக்கு அறிவித்திருந்தனர்.

இந்நிலையில், இலங்கைக்கான தூதரகத்தின் நடவடிக்கையால் 48 இலங்கையர்களும் இன்று நாடு திரும்பியுள்ளனர்.

## ஆற்றில்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
இவ்வாறு மீட்கப்பட்டது என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இது தொடர்பில் பொக வந்தலாவைப் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளநிலையில் சம்பவ இடத்துக்கு விரைந்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர்.

# இறக்குமதி, ஏற்றுமதி கட்டுப்பாடு குறித்தே நாணய மாற்று விகிதம் தீர்மானிக்கப்படும்

## சிரேஷ்ட விரிவுரையாளர் பிரியங்க துனுசிங்க கருத்து

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய நாணய மாற்று விகிதங்கள் எதிர்காலத்தில் தீர்மானிக்கப்படும் என கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளாதார பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி பிரியங்க துனுசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதுள்ள நிலைமைகளின் கீழ் அமெரிக்க டொலருக்கு நிகரான ரூபாவின் பெறுமதி 315 முதல் 320 வரையில் நிலைபெறுவதற்கான சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இறக்குமதி கட்டுப்பாடுகள் நீக்கப்பட வேண்டும் என சர்வதேச நாணய நிதியம் அறிவித்துள்ளது. நிதியத்துக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்றால் பல கட்டுப்பாடுகளைத் தளர்த்த வேண்டிய நிலைமை அரசாங்கத்துக்கு ஏற்படும்.

அவ்வாறு கட்டுப்பாடுகளைத் தளர்த்தினால் டொலரின் தேவைகள் பாரிய அளவில் அதிகரிக்கும். அவ்வாறு அதிகரித்தால் நாட்டில் உள்ள கையிருப்புக்கள் குறைவடையும்.

இதன் போது டொலரின் பெறுமதி மேலும் அதிகரிக்கும். அதற்கமைய, இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாடு தொடர்பில் எடுக்கப்படும் தீர்மானங்களுக்கு அமைய நாணய மாற்று விகிதங்கள் தீர்மானிக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# லிஸ்திரியா நோய் தொற்று தொடர்பில் மக்கள் அச்சம் கொள்ள வேண்டாம்

## தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவிப்பு

லிஸ்ட்டியோரிஸிஸ் அல்லது லிஸ்திரியா எனப்படும் நோய் தொற்று தொடர்பில் மக்கள் தேவையற்ற அச்சம் கொள்ளத் தேவையில்லை என தொற்று நோய் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

நாட்டில் இந்த நோய்த் தொற்று பரவுகை அபாயம் கிடையாது என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிவனொளிபாத மலைக்குச் செல்லும் வழியில் அமைந்துள்ள கடையொன்றில் பெண்ஒருவர் லிஸ்திரியா நோய் அறிகுறியுடன் உயிரிழந்த சம்பவம் தொடர்பில் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

சிவனொளிபாத மலைக்கு யாத்திரை சென்ற இரண்டு யாத்ரீகர்கள் உயிரிழந்த போது அவர்களுக்கு லிஸ்திரியா தொற்று பரவியிருக்கலாம் எனக் கூறப்பட்ட போதிலும் இதுவரையில் அது உறுதிப்படுத்தப்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விடயம் தொடர்பில் தொடர்ச்சியாக பரிசோதனை மேற்கொள்ளப்படுவதாகவும், அந்தப் பகுதிகளுக்கு சென்று உணவு மற்றும் நீர் மாதிரிகள் பெற்றுக்கொள்ளப்பட்டு பரிசோதனை நடத்தப்படும் எனவும் தொற்று நோய்த் தடுப்பு பிரிவு அறிவித்துள்ளது.

# நாட்டைத் திவாலாக்கிக் கடன்பெற்று தம்பட்டம் அடிப்பதில் அர்த்தமில்லை

## போட்டுத் தாக்குகிறார் கிரியெல்ல

நாட்டை வங்குரோத்து நிலைக்கு கொண்டு சென்றுவிட்டு இப்போது கடன் வாங்கிவிட்டதாக தற்பெருமை பேசி பயனில்லை என எதிர்க்கட்சி உறுப்பினர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

நாட்டின் கையிருப்பை பூஜ்ஜியமாக குறைத்த இந்த அரசாங்கம் அந்த நெருக்கடியிலிருந்து மீள்வதற்காகவே கடனைப் பெற்றதாகவும், குறிப்பிட்டுள்ளார். இந்தப் பணத்தை வழங்கு–வதற்கான நிபந்தனைகள் என்னவென்று அவர்களுக்குத் தெரியாது என்றும் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

இதேநேரம் நாட்டின் நீதித்துறை, தேர்தல்கள் ஆணைக்குழு மற்றும் ஊடகவியலாளர்களை நாடாளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி நசுக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டியுள்ளார். 21 ஆம் திருத்தத்தின் மூலம் நீதித்துறை மற்றும் உயர் அதிகாரிகளின் சுதந்திரம் தற்போது நாடாளுமன்ற சிறப்புரிமைகளை பயன்படுத்தி அழிக்க முயல்வதாகவும் குற்றம் சாட்டியுள்ளார்.

## இலங்கை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
விதத்திலும் தீர்வைக் காண்பதற்கு உதவும் வகையில் சீனாவின் எக்ஸிம் வங்கி நிதி ஆவணங்களை வழங்கியுள்ளது.

இச்செயற்பாடு இலங்கை தனது கடன் மறுசீரமைப்புத் தன்மையை அடைவதற்கு உதவுவதில் சீனா எவ்வளவு தூரம் நேர்மையான விதத்தில் செயற்பட்டது என்பதை வெளிப்படுத்தியுள்ளது.

சீனாவானது கடன் வழங்கிய நாடுகள் மற்றும் சர்வதேச அமைப்புகளுடன் இணைந்து செயற்படுவதற்கும் இலங்கை நெருக்கடிக்குத் தீர்வைக் காண்பதற்கும் உதவுவதற்கும் தயாராகவுள்ளது – என்றார்.

## நல்லிணக்க.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ஆணைக்குழு போன்ற நிறுவனங்களைக் குழு முன்னிலையில் கலந்துரையாடல்களுக்கு அழைக்கப்படவிருப்பதாக வும் அவர் தெரிவித்தார்.

குழு உறுப்பினர்களான ஏ.எல்.எம்.அதாவுல்லா, குலசிங்கம் திலீபன், மயாதுன்ன சிந்தக அமல், கெவிந்து குமாரதுங்க, திருமதி ரஜிகா விக்கிரமசிங்க, எம்.ஏ. சுமந்திரன், இசுரு தொடங்கொட ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண் டனர்.

## 10 படகுகள்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
வைக்கப்பட்டிருந்த 10 படகுகள் ஒரே இரவில் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கடலட்டை தொழிலில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இந்தப் படகுகள், நீண்ட காலமாக தொழிலுக்குக் கொண்டு செல்லப்படாமல் கரையில் ஏற்றி கவிழ்த்து வைக்கப்பட்டிருந்த சமயம் இன்று அதிகாலை 2 மணியளவில் அவை தீயிட்டு எரிக்கப்பட்டுள்ளன.

அல்ஜித்தா, தில்லையடி, புத்தளம் முகவரியில் வசிக்கும் சாகுல் ஹமீது ஜெளபர் (672332982ו) என்பவருக்கு இந்தப் 10 படகுகளும் சொந்தமானவை.

படகுகளுக்குத் தீவைக்கப்பட்டதற்கான காரணம் என்னவென்பது தெரியவரவில்லை. சந்தேகநபர்கள் எவரும் கைது செய்யப்படவுமில்லை.

இது தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை நடத்தி வருகின்றனர்.

## ஐ.எம்.எப்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
சர்வதேச நாணய நிதியத்தின் நீடிக்கப்பட்ட நிதி வசதியின் முதல் தவணை கொடுப்பனவு கிடைத்துள்ளமை குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் இன்று விசேட உரை மூலம் அறிவித்தார். அத்துடன், சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையை ஜனாதிபதி நாடாளுமன்றில் முன்வைத்தார். இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு வலியுறுத்தினார்.

அதற்கு அமைச்சர் சுசில் பிரேமஜயந்த, தாம் விவாதத்துக்குத் தயாராக இருப்பதாகவும், இன்றைய தினம் இரண்டு நிதி சட்டமூலங்கள் சார்ந்த விவாதங்கள் நடைபெற இருப்பதால் அதனையடுத்து எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கையை நிறைவேற்ற முடியும் என்றும் தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் விவாதத்தைத் தாமதிக்காமல் நடத்த வேண்டும் எனவும், தமது தரப்பினரின் கேள்விகளுக்கு அஞ்ச வேண்டாம் எனவும் தெரிவித்தார்.

இதனிடையே, எழுந்து நின்ற நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச, இலாபம் பெறும் நிறுவனங்களான ஸ்ரீலங்கா ரெலிகொம் மற்றும் லங்கா ஹொஸ்பிடல்ஸ் ஆகியவற்றின் பங்குகளை விற்பனை செய்வதன் ஊடாக அவற்றை வெளிநாட்டு முதலீட்டாளர்கள் பெற்றுக்கொண்டால், இலங்கை ரூபா அமெரிக்க டொலர்களாக மாற்றப்பட்டு நாட்டின் வருமானம் வெளியேறுவதற்கான சாத்தியம் இருப்பதாகச் சுட்டிக்காட்டினார். இதற்கான சரியான தீர்வை சர்வதேச நாணய நிதியத்திடம் கேட்டு தமக்கு அறிவிக்குமாறு ஜனாதிபதியிடம் விமல் கேட்டுக்கொண்டார். விமல் வீரவன்ச உரையாற்றிக்கொண்டிருந்த போது சபையில் ஏனைய உறுப்பினர்கள் கோமிட்டு உரையைக் குழப்பும் வகையில் செயற்பட்டனர்.

உறுப்பினர்கள் அனைவரையும் அமைதிப்படுத்த சபாநாயகர் முயற்சித்துக் கொண்டிருந்த தருணத்தில் விமல் வீரவன்ச, நீங்கள் இப்படி கோமிட்டால் கப்புடு காக்காவை அழைக்க வேண்டியிருக்கும் – என்று எச்சரித்தார்.

இந்தநிலையில், ஜனாதிபதி கோரியமைக்கு அமைய நாட்டை மீட்டெடுக்கும் போராட்டத்தில் அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டுமாயின், உடன்படிக்கையில் அனைத்து விடயங்களுக்கும் உடன்பட முடியாது. எதிர்க்கட்சியினரின் ஒரு சில யோசனைகள் மற்றும் திருத்தங்களை ஏற்றுக்கொண்டு தீர்மானங்களை முன்வைக்க வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர் டி சில்வா ஆகியோர் ஏக குரலாக வலியுறுத்தினர்.

அதனைத் தொடர்ந்து ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் ஆகியோர் பரஸ்பரம் விவாதத்தை முன்னெடுத்தனர்.

# ஹஜ் யாத்திரை ஏற்பாடுகளுக்காக தனி அலுவலகம் செவ்வாய் திறப்பு

ஹஜ் யாத்திரைக்கான ஏற்பாடுகளை எவ்வித சிக்கல்களுமின்றி நேர்மையாக முன்னெடுப்பதற்கு இந்த ஆட்சி நடவடிக்கை எடுத்துள்ளது என புத்த சாசன சமயம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரம நாயக்க தெரிவித்தார்.

இதற்கெனவே முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில் தனியான அலுவலகமொன்று திறந்து வைக்கப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

செவ்வாய்க்கிழமை கொழும்பு முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தில்ஹஜ்விவகாரங்களுக்கென தனியான அலுவலகமொன்றினைத் திறந்து வைத்து உரையாற்றியபோது அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இதுவரை காலமும் ஹஜ் விவகாரங்களுக்கென தனியான ஓர் அலுவலக இருக்கவில்லை. இதனால் ஹஜ் யாத்திரிகர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். மக்களின் சிரமங்களைத் தவிர்ப்பதற்காகவே இந்தக் காரியாலயம் திறந்து வைக்கப்பட்டுள்ளது. அனைத்து முஸ்லிம்களுக்கும் கட்சி வேறுபாடுகளின்றி இந்த ஆட்சி சேவைகளை வழங்கும். தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும்.

எந்தவொரு மதத்திலும் பிரிவினைகள் போதிக்கப்படவில்லை. இவற்றைக் கடந்து நாம் பயணிக்க வேண்டும். அவர்களின் மத வாழிபாடுகளை முழுமையாக நிறைவேற்ற எம்மால் முடிந்தளவு ஒத்துழைப்பை வழங்க முன்வரவேண்டும்.

முஸ்லிம்கள் தங்களது மத வழிபாடுகளில் ஈடுபடும் போது பிரச்சினைகள் எழுவதாக எமக்கு முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கிறது. இதுதொடர்பில் ஆராயப்படும்.

கடந்த வருடம் கொவிட் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக குறிப்பிட்ட சிறிய தொகையினருக்கே ஹஜ் வாய்ப்புக் கிட்டியது. இவ்வருடம் இலங்கைக்கு 3500 ஹஜ் வாய்ப்புகள் கிடைக்கப்பெற்றுள்ளன. ஹஜ் முகவர் நியமனத்துக்கான நேர்முகப்பரீட்சை தற்போது நடைபெற்று வருகிறது.

நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளின் அடிப்படையில் அடுத்த வாரம் ஹஜ் முகவர்கள்நியமனம்வழங்கப்பட்டுஹஜ்ஏற்பாடுகள்முன்னெடுக்கப்படும். முகவர்கள் வழங்கும் சேவைக்கேற்ப ஹஜ் கட்டணங்கள் நிர்ணயிக்கப்படும். இது தொடர்பான விவரங்கள் உத்தியோக பூர்வமாக அறிவிக்கப்படும் – என்றார்.

# சிங்களக் குடியேற்றத்துக்காகத் தமிழர் தாயகம் இராணுவத்தால் திட்டமிட்டு அழிக்கப்படுகின்றது

## கஜேந்திரன் எம்.பி. காட்டம்



தமிழ் இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவால் நாவற்குழியில் திறந்து வைக்கப்பட்டபௌத்தவிகாரை அகற்றப்படவேண்டும். யுத்தம் முடிவடைந்த பின்னரான காலப்பகுதியிலும் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகம் இராணுவத்தின்உதவியுடன்அழிக்கப்பட்டு சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றமை எதிர்காலத்தில் மோசமான விளைவுகளை ஏற்படுத்தும் என தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் இடம் பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்கு விதிகள் நிதி பொருளாதார உறுதிப் பாடு மற்றும் தேசிய கொள் கைகள் அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளைகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறல்தொடர்பான பிரேரணைகள் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு நல்லதொரு சமிக்ஞையல்ல. நாடு தொடர்ந்து கடன்சுமைக்குள் சிக்குண்டுள்ளது என்பதை மேன்மேலும் வலுப்படுத்துகிறது. நாடு பொருளாதார பாதிப்பை எதிர்க்கொண்டதன் பின்னர் தான் மக்கள் வீதிக்கு இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டார்கள், மக்கள் முறைமை மாற்றத்தை கோரினார்கள். சிங்கள ஆட்சியாளர்கள்தான்சிங்கள–தமிழ் மக்கள் மத்தியில் முரண்பாடுகளை உருவாக்கி தமிழர்களுக்கு எதிரான வன்மங்களைக் கட்டவிழ்த்து விட்டார்கள்,அதற்கு இந்த ஒற்றையாட்சி அரசியல் முறைமை கட்டமைப்பு சாதகமாக அமைந்தது. யுத்தத்தின் பின்னர் நாடு அபிவிருத்தி பாதையில் செல்லாமல், அழிவு பாதையில் சென்றுள்ளது. ஆகவே கடந்த 75 ஆண்டுகாலமாக கடைபிடித்த ஒற்றையாட்சி முறைமையைக் கைவிட்டு தமிழர் தொடர்ந்து வலியுறுத்தும் சமஷ்டியாட்சி அரசியல் முறைமையை அமுல்படுத்த வேண்டும். இதுவே உண்மையான முறைமை மாற்றமாக இருக்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, சர்வாதிகார ஆட்சி நோக்கிச் செல்கிறார். இது நல்லதொரு நிலையல்ல, சீனாவின் ஆதிக்கத்தைக் கட்டுப்படுத்த வேண்டும் என்பதற்காக மேற்குலக நாடுகள் இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்கும் புறச்சூழலை ஏற்படுத்திக் கொடுத்துள்ளன. இதன் காரணமாக சர்வதேச நாணய நிதிய ஒத்துழைப்பு கிடைக்கப் பெற்றுள்ளது, ஆகவே, கிடைத்த நிதியை கொள்ளையடித்தால் நாடு மேன்மேலும் தீவிரமான பாதிப்புக்களை எதிர்கொள்ளும்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் தமிழர் தாயகத்தை அழிக்கும் வகையில் திட்டமிட்ட வகையில் சிங்களக் குடியேற்றங்கள் உருவாக்கப்படுகின்றன. யாழ்ப்பாணம் மாவட்டத்தில் நாவற்–குழியில் இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவால் பௌத்த விகாரை திறந்து வைக்கப்பட்டது.

ஒரு சிங்களவர்கள் கூட வாழாத நாவற்குழி பகுதியில் ராஜபக்ஷர்களால் சிங்கள குடியேற்றம் உருவாக்கப்பட்டது. ரயில் திணைக்களத்துக்கு சொந்தமான காணியில் சட்டவிரோதமான முறையில் பௌத்த விகாரை அமைக்கப்பட்டு, இனப்படுகொலையாளி சவேந்திர சில்வாவால் திறந்து வைக்கப்பட்டது, இதற்கு எதிரான போராட்டத்தை முன்னெடுத்தோம்.

தமிழர்களுக்கு எதிரான திட்டமிட்ட செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும், இனப்படுகொலையாளி சவேந்திரசில்வாவால் திறந்து வைக்கப்பட்ட விகாரை அந்த இடத்தில் இருந்து அகற்றப்பட வேண்டும். அத்துடன் கைத்தடியில் அமைக்கப்பட்டு வரும் விகாரை, குருந்தூர்மலை விகாரை, கொக்குத்தொடுவாய், எமாங்குளம் ஆகிய பகுதிகளில் அமைக்கப்பட்டு வரும் விகாரைகள் அகற்றப்பட வேண்டும்.

நாங்கள் பௌத்தத்துக்கும், சிங்களவர்களுக்கும் எதிரானவர்கள் அல்லர். நயினைதீவு,கிளிநொச்சியில் உள்ள பௌத்த விகாரைகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. விடுதலை புலிகள் அமைப்பு காலத்தில் கூட இந்த விகாரைகள் இருந்தன. போராளிகளால் எவ்வித பாதிப்பும் பௌத்த விகாரைகளுக்கு ஏற்படுத்தப்படவில்லை. ஆனால் யுத்தத்தின் பின்னர் தமிழரின் தாயகம் இராணுவத்தின் துணை ஊடாக திட்டமிட்டு அழிக்கப்படுகிறது.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் இழுபறி நிலையில் உள்ளது. நிதி இல்லை, ஆகவே தேர்தல் இல்லை என ஆளும் தரப்பு குறிப்பிடுகிறது. சர்வதேச நாணய நிதியத்தின் ஒத்துழைப்பு தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே, நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்த தேர்தலை நடத்த அரசாங்கம் தயாராக உள்ளதா? பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்க உலக வங்கி முன்வந்துள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

ஆகவே இந்த நிதியுதவி 200 ஆண்டு காலமாக பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மலையக மக்களுக்கும்,வடக்குமற்றும்கிழக்கு மாகாணங்களில்பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கும் வழங்கப்படுமா? – என்றார்.

## சிங்கள ம.வி. காணி விவகாரம்

# மாகாண அலுவலங்களில் இன்னும் முடிவில்லையாம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ் சிங்கள மகா வித்தியாலய காணியை படையினருக்கு வழங்குவதற்கு வடக்கு மாகாண அலுவலக மட்டத்தில் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என அமைச்சின் செயலாளர் அ.உமா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார். யாழ் செம்மணிப் பகுதியிலுள்ள மாகாண கல்வி அமைச்சின் அலுவைகத்தில் திங்கட்கிழமை நடைபெற்ற ஊடகச் சந்திப்பின் போதே அவர் இக் கருத்தை தெரிவித்தார்.

1995ஆம்ஆண்டுமுதல் சிங்கள ம.வி. பாடசாலைக் காணியை படையினர் பயன்படுத்தி வருகின்றனர். இந்த நிலையில் அக் காணியை படைத்தரப்பினருக்கே வழங் குமாறு வடக்கு மகாணக் கல்வி அமைச்சிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டிருந்தது. கடந்த வருடம் கொழும்பிலிருந்து மாகாண கல்வி அமைச்சிற்கு கோரிக்கை வந்திருந்தது. அதனை வழங்குவதா இல்லையா என்பது குறித்து எந்தவித தீர்மானங்களையும் மாகாண கல்வி அமைச்சோ மாகாணக் கல்வித் திணைக்களமோ இதுவரையில் நடவடிக்கை எடுக்கவில்லை.

ஆயினும் அந்தக் கோரிக்கையின் பிரகாரம் காணியை வழங்கி விட்டதாக சில ஊடகங்களில் செய்திகள் வெளிவந்திருக்கின்றன.

அதில் உண்மையில்லை – என்றார்.

அந்தக் காணியைப் படையினருக்கு வழங்குவதில் தமக்கு ஆட்சேபனை ஏதுமில்லை என்று யாழ்ப்பாண வலயக் கல்விப் பணிப்பாளர் ஏற்கனவே எழுத்து மூலம் தெரிவித்திருப்பது குறித்து அவர் கருத்து எதனையும் தெரிவிக்கவில்லை. மாகாண மட்டத்தில் காணியைக் கொடுப்பதற்கு இன்னும் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று தெரிவித்தார்.

# பாடசாலை மாணவன் திடீரென பரிதாப சாவு

## பாணந்துறையில் துயரம்

பாணந்துறை பிரதேசத்தில் பாடசாலை மாணவர் ஒருவர் திடீரென உயிரிழந்தார்.

இந்த சம்பவம் செவ்வாய்க்கிழமை இடம் பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த மாணவன் நண்பர்கள் குழுவுடன் விளையாடிக் கொண்டிருந்த போது உடல் நலக் குறைவு ஏற்பட்டு உடனடியாக வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளார்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட மாணவர் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்துள்ளான் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

களுத்துறை வடக்கில் வசிக்கும் 16 வயதுடைய மாணவனே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த பாடசாலை மாணவர் உடல் நலக்குறைவால் பாதிக்கப்பட்டிருந்தார் என ஆரம்ப கட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பிரேத பரிசோதனை நடைபெறவுள்ளதுடன், பாணந்துறை பின்வத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ஆஸ்திரேலிய நாடாளுமன்றில் ஒலித்த ஈழத் தமிழர் இனப்படுகொலைக் கதை



தமிழ் அகதிகள் பேரவையின் பிரதிநிதிகள் குழு 2023 ஆம் ஆண்டு மார்ச் 6 ஆம் திகதி ஆஸ்திரேலிய சுயேச்சை உறுப்பினர் லிடியா தோர்பேவை சந்தித்து கலந்துரையாடியுள்ளனர்.

இந்தச் சந்திப்பின் போது தமிழ் அகதிகளின் கதைகளையும் அவர்களின் தனிப்பட்ட மற்றும் தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலையின் சாட்சிகளையும் லிடியா தோர்பேவுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர்.

இந்நிலையில், நேற்று (செவ்வாய்க்கிழமை) லிடியா தோர்ப், ஆஸ்திரேலிய நாடாளுமன்றத்தில் 33 வயதான ஈழத் தமிழரின் இனப்படுகொலை தொடர்பான உரையை வாசித்துள்ளார்.

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலையை நேரில் கண்ட அவரது கதையை அந்த உரை வெளிச்சம் போட்டுக் காட்டியது.

இந்த உரையின் போது, லிடியா தோர்ப், இனப்படுகொலையை அங்கீகரிப்பது அவசியம் என்றும், அகதிகளுக்கு எதிரான அவர்களின் சித்திரவதை வடிவங்களையும், ஈழத் தமிழர்களுக்கு எதிரான இலங்கை இனப்படுகொலைக் குற்றங்களில் அவர்கள் மெத்தனமாக இருப்பதையும் ஒப்புக்கொள்ளுமாறு குடிவரவுத் துறைக்கு இதன்போது அழைப்பு விடுத்துள்ளார்.



# நூல் வெளியீடு

(எஸ்.நிதர்ஷன்)

சிதம்பரப்பிள்ளை சிவகுமார் நினைவுப் பகிர்வும் புத்த(கு)ன் நூல் வெளியீடும் யாழ் நாவலர் கலாச்சார மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை மாலை நடைபெற்றது.

ஊடகவியலாளர் இளைய தம்பி தயானந்தா தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் சிவகுமாரின் உருவப் படத்திற்கு அவரின் மனைவி வாசுகி சிவகுமார் உள்ளிட்டவர்கள் மலர்தூவி அஞ்சலி செலுத்தினர்.

மூத்த ஊடகவியலாளர் பாரதி நூலை வெளியிட்டு வைக்க யாழ். மாநகர சபை ஆணையாளரும் கவிஞருமான ஜெயசீலன் முதற் பிரதியைப் பெற்றுக் கொண்டார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஸ் பிரேமச்சந்திரன் மற்றும் முருகேசு சந்திரகுமார், கவிஞர் சோ.பத்மநாதன், உள்ளிட்ட கவிஞர்கள் கல்விமான்கள் இலக்கியவாதிகள், ஊடகவியலாளர்கள் பொது மக்கள் எனப் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

# குருவிக்காட்டில் துப்புரவுப் பணி

தென்மராட்சி, மார்ச் 22

வன வளத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் வன தினத்தை முன்னிட்டு செவ்வாய்க்கிழமை காலை சரசாலை–குருவிக்காட்டு சூழலில் துப்புரவுப் பணி முன்னெடுக்கப்பட்டது.

இயற்கைக் காடான குருவிக்காட்டில் இயற்கைக்குக் கேடு விளைவிக்கும் வகையில், அறிவுறுத்தல்களையும் மீறி கழிவுகள் கொட்டப்படுள்ளன. அவற்றை அகற்றி குருவிக்காட்டுச் சூழலைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. ஆங்காங்கே விழிப்புணர்வுப் பதாகைகளும் காட்சிப்படுத்தப்பட்டன.

குருவிக்காட்டு பகுதியில் வீதியின் இருமருங்கும் பெருமளவான மருத்துவக் கழிவுகள் கொட்டப்பட்டு வருவதாகவும் அது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து உரியவர்களை கண்டறிந்து சட்டத்தின் முன்நிறுத்து–வதற்கான நடவடிக்கைகள் எடுக்கவிருப்பதாகவும் வன வளத் திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

இந்தத் துப்புரவுப் பணியில் வன வளத் திணைக்கள அதிகாரிகள், சுற்றுச்சூழல் அதிகார சபையினர், தென்மராட்சி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், சாவகச்சேரி பிரதேச சபையினர் மற்றும் கிராம மக்கள் இணைந்திருந்தனர்.





# ஒரு ஊடகத்திற்கு எதிராக மட்டும் நடவடிக்கை எடுக்கப்படக்கூடாது

## நாடாளுமன்றில் மைத்திரி சுட்டிக்காட்டு



ஊடகங்களைக் கண்காணிக்க வேண்டுமாயின் காலையில் பத்திரிகை செய்திகள் ஊடாக பொய்களை மாத்திரம் சமூகமயப்படுத்தும் ஊடகங்களையும் கண்காணிக்க வேண்டும்.

ஊடகங்களுடன் பிரச்சினைகள் காணப்படுமாயின் அதனை நாடாளுமன்றத்திற்குள் தீர்த்துக் கொள்ளவேண்டும். நீதிமன்றம் வரை செல்வது அவசியமற்றது என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் பெற்றோலிய வளங்கள் சட்ட ஒழுங்குவிதிகள், நிதி,பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சின் ஒதுக்கீட்டு சட்ட கட்டளைகள் மற்றும் நாடாளுமன்றம், நாடாளுமன்ற உறுப்பினர்களின் சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

சியத்த ஊடக நிறுவனத்தின் டெலிவெகிய நிகழ்ச்சி தொடர்பில் எடுக்கப்படும் நடவடிக்கை பாரதூரமானது.

நான் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் திட்டமிட்டு என்னை ஊடகங்கள் விமர்சித்து செய்திகளை வெளியிட்டன. தற்போது நாடாளுமன்ற உறுப்பினராக உள்ளபோதும் பொய்யான செய்திகள் பல வெளியாகுகின்றன.

அரசமைப்பின் 19 ஆவது திருத்தம் ஊடாக ஊடகங்களுக்கு முழுமையான சுதந்திரத்தை வழங்கினேன், அது எனக்கு எதிராக அமைந்தது. என்னை விமர்சித்த போதும் நான் நடவடிக்கை எடுக்கவில்லை. இதனால் குறித்த நிகழ்ச்சி தொடர்பான விடயத்தை நீதிமன்றத்துக்கு கொண்டு செல்லாது நாடாளுமன்றத்திற்குள் ஒரு தீர்வு எடுத்துக் கொள்ள வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட ஊடக நிறுவனங்களை கண்காணிக்காமல் ஒட்டுமொத்த ஊடகங்களை கண்காணிக்க வேண்டுமாயின் காலையில் பத்திரிகை செய்தி வாசித்து பொய்யான கருத்துக்களை சமூக மயப்படுத்தும் நிறுவனங்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கத்திற்கு அது முடியுமா? - என்றார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## தமிழர்களுக்கும் ஞாபகம் வருகிறது

**பன்னாட்டுச் செலாவணி நிதியத்தின் கடன் கிடைத்ததையொட்டி, திவாலாகிப் போன நாட்டைப் பிணை எடுப்பதற்கு வழியேற்பட்டுவிட்ட மகிழ்ச்சியை நாடாளுமன்றத்தில் அவர் இன்று பகிர்ந்துகொண்டார். அப்போது அவரது உரையின் இடையில் இந்த நாடு கடந்த ஒரு வருடத்துக்கும் குறைந்த காலப் பகுதியில் எப்படியிருந்தது என்று விரிவாக – விலாவாரியாக – விளக்கியிருந்தார்.**

**“பற்றி எரிந்துகொண்டிருந்த ஒரு நாட்டையே ஆடி 9 நான் பொறுப்பேற்றேன். குழப்பத்தில் இருந்த நாடு. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்த நாடு. வங்குரோத்தடைந்துவிட்டதாக உத்தியோகபூர்வமாக அறிவித்த நாடு. பணவீக்கம் 73 சதவீதமாக உயர்ந்திருந்த நாடு. எரிபொருள், எரிவாயு வரிசையில் மக்கள் பல நாட்கள் அவதிப்பட்ட நாடு. பாடசாலைகள் மூடப்பட்ட நாடு. ஒரு நாளைக்கு பத்து – பன்னிரெண்டு மணி நேரம் மின்சாரம் தடைபட்டிருந்த நாடு.**

**விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலிருந்த நாடு. சட்டம் ஒழுங்கு பின்பற்றப்படாத நாடு. அரச அலுவலகங்கள் பலவந்தமாக ஆக்கிரமிக்கப்பட்டு, வெளியாட்கள் அதில் குடியேறியிருந்த நாடு. ஒவ்வொரு இடத்திலும் குண்டர்கள் தாக்குதல் நடத்திய நாடு. எதிர்தரப்பினரின் வீடுகளை எரிக்கும் நாடு. நெடுஞ்சாலையில் மக்கள் கொல்லப்பட்ட நாடு.**

**இவ்வாறான பின்னணியில் பொறுப்பை ஏற்க எவரும் விரும்பவில்லை. சிலர் பின்வாங்கினார்கள். சிலர் ஜாதகம் பார்க்க நேரம் கேட்டார்கள். சிலர் நழுவிச் சென்றனர். சிலர் பயந்தார்கள். அவர்களில் யாரும் பொறுப்பை ஏற்க முன்வராத நிலையில் என்னிடம் பொறுப்பேற்குமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டது.**

**எந்த நிபந்தனையுமின்றி இந்தச் சவாலை ஏற்றுக்கொண்டேன். நாடாளுமன்றத்தில் எனக்கு அதிகாரம் இருக்கவில்லை. எனக்கென்று உறுப்பினர்கள் யாரும் இருக்கவில்லை. ஆனால் இவை எதுவும் இல்லாவிட்டாலும், எனக்கு ஒரே ஒரு பலம் இருந்தது. நான் பிறந்து, வளர்ந்து, படித்த எனது நேசத்துக்குரிய நாட்டை மீண்டும் கட்டியெழுப்ப முடியும் என்ற நம்பிக்கை மட்டுமே இருந்தது.”**

**இவ்வாறு அவர் தெரிவித்தார். அவரது உரையைக் கேட்டபோது மூன்று தசாப்த காலமாக, போர்க் காலத்தில் தமிழர்கள் அனைவரும் இதே நிலமைகளை அணு அணுவாக அனுபவித்தார்களே அப்போது இதே ரணில் விக்கிரமசிங்கவும் சேர்ந்துதான் போரை நடத்தினார் என்பது ஞாபகத்துக்கு வந்தது.**

**தமிழர் தாயகம் பற்றி எரிந்துகொண்டிருந்தது. அதன் எல்லாப் பகுதிகளுமே குழப்பத்தில் இருந்தன. நாளைய தினம் குறித்து கடுகளவும் நம்பிக்கை இல்லாதிருந்தது. அறிவிக்காமலேயே மக்கள் வங்குரோத்து நிலையில்தான் இருந்தார்கள். பணவீக்கம் உச்சத்தைத் தொட்டிருந்தது. அது எவ்வளவு தூரம் ஏறியிருந்தது என்று தெரிந்துகொள்ளக்கூட யாரும் அக்கறை காட்டவில்லை. எரிபொருள், எரிவாயு வரிசையில் நின்று மக்கள் அவதிப்பட்டார்கள். பல மாதங்களுக்கு வாரங்களுக்கு அவற்றை எதிர்பார்த்து கண்கள் பூத்துக் கிடந்தார்கள். அத்தியாவசிய உணவுப் பொருட்களுக்கே கப்பல்களை எதிர்பார்த்து பல நாள்கள் காத்திருந்தார்கள். சங்கக் கடைகளின் முன்பாக அரிசிக்கும் சீனிக்குமே நீண்ட வரிசைகளில் நின்றார்கள். பாடசாலைகளுக்குச் சென்றால் மாணவர்கள் உயிருடன் திரும்ப முடியுமா என்ற அச்சம் நாலாபுறமும் சூழ்ந்திருந்தது. பல ஆண்டுகளாக மின்சாரமே இல்லாதிருந்தது.**

**விவசாயிகளுக்கு உரம் கிடைக்காமலிருந்தது. சட்டம் ஒழுங்கு அரச படையினரும் காவல்துறையினரும் வைப்பதுதான் என்றிருந்தது. ஒவ்வொரு இடத்திலும் குண்டர்களைப் போன்று அரச படையினரே நீதிக்குப் புறம்பான கொலைகளைச் செய்–துகொண்டிருந்தார்கள். எதிர்தரப்பினரின் என்ற போர்வையில் எந்த வீடு மீதும் குண்டு வீச முடியும் என்றிருந்தது. ஏவப்படும் குண்டுகள் யார் மீது விழும் என்று தெரியாத நிலையிருந்தது.**

**அப்படியெல்லாம் இருந்தபோதும் இந்த மக்களுக்காகப் பரிதாபப்பட, அவர்களையும் மனிதர்களாக மதித்து நடக்க தெற்கில் ஒரேயொரு அரசியல் தலைவர்கூட இருந்ததில்லை. அவர்களுக்காகக் குரல் கொடுக்க யாரும் முன்வந்ததில்லை. நல்லவேளை இன்று சிங்கள மக்களுக்காக ரணில் விக்கிரமசிங்க இருந்தார். அதனால் அவர்களால் ஓரிரு வருடங்களில் நிலமையில் ஒரு சிறு முன்னேற்றத்தையாவது காண முடிகிறது. ஆனால், தமிழர்கள் இன்னும் எந்த முன்னேற்றத்தையும் காணாமல் தொடர்ந்தும் அதே நிலையிலேயே இருக்கிறார்கள்.**

# மக்களை அடக்கி ஒடுக்குவதற்கு அரசு குண்டர்களைப் பயன்படுத்துகின்றது

## வாசுதேவ நாணயக்கார சாடல்



மக்கள் மீதான அடக்குமுறைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத்தினருக்கு மேலதிகமாக அரசாங்க கட்சிகளின் குண்டர் குழுக்கள் பயன்படுத்தப்படுகின்றன என்று முன்னாள் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களதும் நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல், பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழான தீர்மானங்கள் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

அரசாங்கம் இராணுவத்தின் ஊடாக மக்கள் மீது அடக்குமுறைகளை முன்னெடுப்பதற்கு மேலதிகமாகத் தற்போது தமது கட்சிகளின் குண்டர்களின் குழுக்களைப் பயன்படுத்தி சிவில் இராணுவத்தை அமைத்துக்கொண்டு செல்கிறது.

19 ஆம் திகதி திவுலப்பிட்டிய பிரதேசத்தில் மின் கட்டணத்துக்கு எதிராக நடத்தப்பட்ட போராட்டத்தின் போது குண்டர்கள் குழு போராட்டம் மீது தாக்குதல் நடத்தியிருந்தது.

குண்டர் குழுவில் அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள் இருந்தனர். இவர்கள் பொலிஸ் அதிகாரிகளுக்கு முன்னாலேயே இந்தத் தாக்குதலை நடத்தினர். ஆனால் பொலிஸார் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கவில்லை.

இவர்களிடம் இருந்து தப்பிச் செல்லுங்கள் என்றே கூறினர்.

ஆனால் பொலிஸார் அந்தக் குழுவினருக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவில்லை. இன்னும் காயமடைந்த ஒருவர் வைத்தியசாலையில் இருக்கின்றார். ஆனால் இன்னும் கைது செய்யப்படவில்லை.

இதன்மூலம் அரசாங்கத்தின் குண்டர் குழுக்கள் திட்டமிட்டு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு பயன்படுத்தப்படுகின்றன என்பதே தெளிவாகின்றது.

இதற்கு முன்னர் எவரும் அடையாளம் காணமுடியாத இராணுவ சீருடை அணிந்தவர்களால் மாணவர்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டது. இதனால் நாங்கள் மக்களை அணிதிரட்டி இதற்கு எதிராகப் போரட்டம் நடத்துவோம். – என்றார்.

# காணாமல் ஆக்கப்படுதலில் இலங்கைக்கே முதல் பரிசில்

## எஸ்.சிறிதரன் எம்.பி. ஆக்ரோஷம்



மாகாண சபைத் தேர்தலை நடத்த இந்தியா இலங்கைக்கு கடும்அழுத்தம்பிரயோகிக்க வேண்டும். இலங்கையில் தான் தமிழர்கள், நிலங்கள், ஆணைக்குழுக்கள், முறைமைகள் காணாமலாக்கப்படும், காணாமலாக்கப்படுவதற்கு பரிசில் வழங்கப்படுமாயின் இலங்கைக்கு முதல் பரிசை வழங்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்றத்தினதும் நாடாளுமன்ற உறுப்பினர்களினது உறுப்பினர்களினதும் சிறப்புரிமைகள் மீறல் தொடர்பான சபை ஒத்திவைப்பு விவாதத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு –

இனப்பிரச்சினைக்கு தீர்வாக அரசமைப்பின் 13 ஆவது திருத்தத்தில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமை காணாமலாக்கப்பட்டுள்ளது.

இந்த நாட்டில் தான் தமிழர்கள் காணாமலாக்கப்படுவார்கள், தமிழ்களின் நிலங்கள் காணாமலாக்கப்படும், ஆணைக் குழுக்கள் மற்றும் அரசமைப்பால் உருவாக்கப்பட்ட முறைமைகள் காணாமலாக்கப்படும். காணாமலாக்கப்படுதலுக்கு பரிசு வழங்க வேண்டுமாயின் இலங்கைக்கு முதல் பரிசை வழங்க வேண்டும்.

சிங்கள பேரினவாதத்தால் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்மங்களால் பல ஆண்டுகாலமாகப் பாதிக்கப்பட்ட தமிழர்கள் யுத்தம் முடிவடைந்த பின்னரும் எமது உறவுகளின் உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுகின்றன.

நெடுந்தீவு பகுதியில் வலுக்கட்டாயமான முறையில் சிங்கள குடியேற்றங்கள் அமைக்கப்படுகின்றன. மறுபுறம் சிங்கள மக்கள் வாழாத நாவற்குழி பகுதியில் பௌத்த விகாரையை முன்னாள் இராணுவ தளபதி சவேந்திர சில்வா திறந்து வைக்கிறார். அதற்கு மக்கள் கடும் எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள். தமிழ்களின் தொன்மையை பறைசாற்றும் குருந்தூர் மலை, வெடுக்குநாரி ஆகிய வரலாற்ற சிறப்புமிக்க தலங்களில் புத்தர் தோற்றமடைந்துள்ளார். இந்த நாடு எதை நோக்கிச் செல்கிறது?

யுத்தம் முடிவடைந்த பின்னரும் எம் உறவுகள் நிம்மதியாக வாழ முடியாமல் தொடர்ந்து உரிமைகளுக்காகப் போராடுகிறார்கள்.

தமிழ்களின் காணிகள் இன்றும் படையினர் கைவசம் உள்ளது. சொந்த நிலங்களை படையினரிடம் விட்டுக் கொடுத்து விட்டு தமிழர்கள் வீதியில் நிற்கிறார்கள். தமது விளைநிலங்களை கண்ணீரோடு பார்த்து மன்றாடுகிறார்கள். ஏன் இந்த கொடுமை, அவரவர் உரிமைகளை அவருக்கு வழங்குவதை ஏன் தடுக்கின்றீர்கள்?

அற்ப சொற்ப அதிகாரங்களைக் கொண்டிருந்த மாகாண சபை முறைமை முழுமையாக இல்லாதொழிந்துள்ளது. தமிழர்களுக்கு வழங்கப்பட வேண்டிய அரசியல் உரிமைகள் தொடர்ந்தும் மறுக்கப்படுகிறது.

யுத்த காலத்தில் தமிழர்களைக் கொலை செய்வதற்கு சிங்களப் படைகளுக்கு ஆயுதம் வழங்கிய அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் தற்போது ஏன் தமிழர்களின் அடிப்படை உரிமைகளுக்கு குரல் கொடுப்பதில்லை.

இந்திய அரசாங்கத்தின் தலையீட்டின் ஊடாகவே இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு, மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தப்பட்டது, ஆகவே, மாகாண சபை தேர்தலை நடத்த இந்தியா, இலங்கை அரசாங்கத்துக்கு கடும் அழுத்தம் பிரயோகிக்க வேண்டும். இல்லாத ஒன்றைக் கேட்கவில்லை, அரசமைப்பில் இருப்பதைக் கேட்கிறோம், ஆகவே தற்துணிவு இருந்தால் அரசாங்கம் மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். – என்றார்.

# சுதந்திர ஊடக செயற்பாட்டை சவாலுக்குட்படுத்த வேண்டாம்

## இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் கோரிக்கை



நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக்கொண்டு ஊடக சுதந்திரம் மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தை மலினப்படுத்துவதன் மூலம் எமது நாடு சர்வதேச ரீதியில் புறக்கணிக்கப்படும் அவதானம் இருக்கிறது.

அந்த நிலைக்கு இடமளிக்கக்கூடாது. அத்துடன் சுதந்திர ஊடக செயற்பாடுகளை அடக்குவதற்கு எடுக்கும் நடவடிக்கை, அடிமைத்தனமான ஊடக முறைக்கு செல்வதற்கான முயற்சியாகும் என எதிர்க்கட்சி உறுப்பினர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் இடம்பெற்ற நாடாளுமன்ற உறுப்பினர்களதும் நாடாளுமன்றத்தினதும் சிறப்புரிமைகள் மீறப்படுதல், பெற்றோலிய வளங்கள் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள் மற்றும் ஒதுக்கீட்டு சட்டத்தின் கீழான தீர்மானங்கள் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து தெரிவிக்கையில் –

நாடாளுமன்ற சிறப்புரிமை ஊடாக சுயாதீன நீதிமன்றம் சுயாதீன ஊடக செயற்பாடுகளை அடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. ஜனாதிபதியால்தான் இது செயற்படுத்தப்படுகிறதா என்ற சந்தேகம் எழுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது விசேட உறுப்பினர்கள் அல்லர். நாட்டின் சட்டத்துக்கு அமையவே அவர்கள் செயற்பட வேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

சிங்கள வானொலி நிகழ்ச்சி ஒன்றில் இடம்பெற்ற அரசியல் கலந்துரையாடல் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, தற்போது அந்த ஊடக நிறுவனத்துக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இது தொடர்பாக சட்டமா அதிபருக்கும் அறிக்கை சமர்க்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த வானொலி நிகழ்ச்சியால் நாடாளுமன்ற சிறப்புரிமை மீறப்பட்டுள்ளதாக முறையிட்டவர் யார் என இதுவரை யாருக்கும் தெரியாது. அப்படியானால் இந்த சபையை யார் வழிநடத்தி வருகிறார்? இதன் பின்னணியில் இருக்கும் மறைமுக சக்தி யார்?.

அதனால் நாடாளுமன்ற சிறப்புரிமையை பயன்படுத்திக் கொண்டு நாடாளுமன்றத்தின் கௌரவத்தை மலினப்படுத்த இடமளிக்கக்கூடாது. முழு நாடாளுமன்றமும் இதுதொடர்பாக ஒன்றுபட்டு செயற்பட வேண்டும்.

இந்த ஊடக அடக்குமுறை தொடர்பாகப் பத்திரிகைகளில் சிறிய செய்தி ஒன்றுகூட பிரசுரிப்பதில்லை.

அந்தளவுக்கு இவர்கள் பயந்துள்ளனரா? அல்லது வியாபார நோக்கத்துக்காக ஊடக உரிமையாளர்கள் செயற்படுகிறார்களா? எனப் பார்க்கவேண்டும்.

இது எமது நாட்டின் சுயாதீன ஊடக முறையை இல்லாதலாக்கி அடிமைத்தனமான ஊடக முறைக்கு செல்வதற்கான முயற்சியாகும். சுயாதீன நீதிமன்றம் சட்டத்தின் ஆதிக்கத்துக்கு, சுயாதீன ஊடக செயற்பாடுகளுக்கு விடுக்கும் சவால் காரணமாக ஜனநாயகத்தை மதிக்கும் சர்வதேச நாடுகளால் நாங்கள் புறக்கணிக்கப்படுகிறோம்.

அதனால் நாட்டின் ஜனநாயக செயற்பாடுகளை இல்லாமல் செய்யும் நாடாளுமன்றத்தை நிறைவேற்று அதிகாரியால் அடிமையாக்கும் நடவடிக்கையை அரசாங்கம் வாபஸ் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறான அரசியல் விளையாட்டை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும். – என்றார்.

# “தண்ணீர் நெருக்கடி ஏற்படும்”

## ஐ.நா. எச்சரிக்கை



காலநிலை மாற்றம் காரணமாகவும், அதிகரித்து வரும் நுகர்வுக் கலாசாரத்தினாலும் உலகளவில் தண்ணீருக்கு நெருக்கடி ஏற்படும் ஆபாயம் இருப்பதாக ஐக்கிய நாடுகள் சபை தெரிவித்துள்ளது.

உலக நாடுகள் ஓர் ஆபத்தான பாதையில் பயணிக்கின்றன. நுகர்வுக் கலாசாரம், காலநிலை மாற்றம், அதிதீவிர வளர்ச்சியினால் தண்ணீர் நெருக்கடி ஏற்படும் அபாயம் உள்ளது. அதிகப்படியான நுகர்வு மற்றும் மாசுபாட்டின் காரணமாக நீர் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது . அதேசமயம் காலநிலை மாற்றங்களும் புவி வெப்பமடைதலை அதிகரித்து நீர் பற்றாக்குறையை தீவிரமாக்கி வருகின்றன. ஆண்டுக்கு 300 கோடி மக்கள் நீர் நெருக்கடியில் வாழ்கின்றனர் என்று இது குறித்து ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மனித குலத்தின் உயிர் நாடியான நீர் மாசினாலும், காலநிலைமாற்றத்தினாலும்தூர்ந்துபோய் வருகிறது என்று ஐ.நா.வின் பொதுச் செயலார் அண்டோனியா குத்தரெஸ் வேதனையுடன் தெரிவித்தார்.

காலநிலைமாற்றம்நம்கண்முன்னே அரங்கேறி வருகிறது. உலகெங்கிலும் லட்சக்கணக்கானவனவிலங்குகள் அதன் பாதிப்பை உணர்ந்து வருகின்றன. மனிதர்களும் அதன் தீவிரத்தை கடந்த பத்து ஆண்டுகளாக எதிர் கொண்டு வருகின்றனர். இவற்றை எல்லாம் கவனத்தில் கொண்டு பூமி வெப்பமடைதலை குறைப்பதற்கான செயல்பாடுகளை விரைவாக நகர்த்த வேண்டிய சூழலில் மனித இனம் உள்ளது. விரைவில் அதற்கான நடவடிக்கைகளில் உலக நாடுகள் இறங்கும் என்று நம்புவோம் -என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# பாக். ஆஸ்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்

## 11 பேர் உயிரிழப்பு; நூற்றுக்கணக்கானோர் காயம்




பாகிஸ்தான் மற்றும் ஆப்கானிஸ்தானில் செவ்வாய்க்கிழமை ஏற்பட்ட சக்திவாய்ந்த நிலநடுக்கத்தில் சிக்கி 11 பேர் மேல் உயிரிழந்துள்ளனர். நூற்றுக்கணக்கானோர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

அமெரிக்க புவியியல் ஆராய்ச்சி மையமானது நிலநடுக்கத்தின் தாக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.5 ஆக இருந்தது என்றும். பூமிக்கு அடியில் 116 மைல் தொலைவில் மையம் கொண்டிருந்தது என்றும் தெரிவித்துள்ளது. மேலும் ஆப்கானிஸ்தானின் ஹிண்டுகுஷ் மலைகளின் தெற்கு தென் கிழக்கு பகுதியை ஒட்டிய ஜூர்ம் நகரில் நிலநடுக்கம் மையம் கொண்டிருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் கைபர் பக்துவான் மாகாணத்தில் மட்டுமே நூற்றுக்கும் மேற்பட்டோர் காயமடைந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளதாக அந்நாட்டின் அவசர நிலை துறை செய்தித் தொடர்பாளர் பிலால் ஃபைசி தெரிவித்தார். வடமேற்கு பாகிஸ்தானில் பாதிப்பு சற்று அதிகமாக இருப்பதாகவும் அவர் கூறினார்.

சில இடங்களில் நிலநடுக்கத்தால் நிலச்சரிவும் ஏற்பட்டுள்ளது. மாகாண பேரிடர் மேலாண்மைத் துறை செய்தித் தொடர்பாளர் டைமூர் கான் கூறுகையில், வடமேற்கு பகுதியில் நிலநடுக்கத்தால் ஏற்பட்ட நிலச்சரிவில் 19 மண் வீடுகள் முற்றிலும் சேதமடைந்துள்ளதாக தகவல் கிடைத்துள்ளது. இன்னும் பாதிப்புகள் பற்றிய தகவல்களை திரட்டி வருகிறோம் என்றார். ஆப்கானிஸ்தானில் ஏற்பட்ட சேதங்கள் குறித்து தலிபான் செய்தித் தொடர்பாளர் ராஃபத் ஜமான் அமர் கூறும்போது, இதுவரை 2 பேரது சடலங்கள் மீட்கப்பட்டுள்ளன. 20 பேர் காயமடைந்துள்ளனர். ஆனால் உயிரிழப்பு எண்ணிக்கை உயரும் என அஞ்சுகிறோம் என்றார்.

அச்சத்தில் ஆப்கன் மக்கள்: ஆப்கானிஸ்தானின் காபூல் நகரைச் சேர்ந்த அய்ஸிமி கூறுகையில், நிலநடுக்கம் மிகவும் சக்தி வாய்ந்ததாக இருந்தது. நாங்கள் உயிர் பிழைக்க மாட்டோம் என்றே நினைத்தோம். ஆனால் எப்படியோ தப்பித்துவிட்டோம் என்றார். 45 வயதான அஜீஸ் அகமது, என் ஆயுள் காலத்தில் நான் இதுபோன்ற சக்திவாய்ந்த நிலநடுக்கத்தை உணர்ந்ததில்லை. பல மணி நேரத்திற்கு மீண்டும் மீண்டும் நில அதிர்வுகள் வந்து அச்சுறுத்தின என்றார்.


பெப்ரவரி மாதம் துருக்கி, சிரியாவில் ஏற்பட்ட பூகம்பத்தில் 45 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் உயிரிழந்தனர். அந்த பூகம்பத்தை முன் கூட்டியே கணித்துச் சொல்லியிருந்த புவியியல் ஆராய்ச்சியாளர் ஆப்கானிஸ்தான், இந்தியாவிலும் நிலநடுக்கங்களுக்கு வாய்ப்புள்ளதாகக் கூறியிருந்தார். இந்நிலையில் நேற்று ஆப்கானிஸ்தான், பாகிஸ்தானில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இதன் தாக்கம் இந்தியத் தலைநகர் டெல்லியிலும் ஒருசில பகுதிகளில் லேசாக உணரப்பட்டதாகத் தெரிகிறது.

# மகிழ்ச்சியான நாடு பின்லாந்து

உலகின் மகிழ்ச்சியான நாடுகள் தரவரிசைப்பட்டியலில் பின்லாந்து முதலிடம் வகிப்பதாக ஐ.நா. வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு நாட்டிலும் மக் கள் எந்த அளவு மகிழ்ச்சியாக வாழ்கிறார்கள்; அதற்கான சூழல் எந்த அளவு இருக்கிறது என்பதை அடிப்படையாகக் கொண்டு மகிழ்ச்சியான நாடு களை தரவரிசைப்படுத்தி அதனை அறிக்கையாக வெளி யிடுவதை ஐ.நா. வழக்கமாகக் கொண்டிருக்கிறது.

அந்த அடிப்படையில் தற்போது வெளியான அதன் அறிக்கையில், மகிழ்ச்சியான நாடுகளின் தரவரிசையும், அதற்கான காரணங்களும் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி, ஐரோப்பிய நாடான பின்லாந்து தரவரிசையில் முதலிடம் பிடித்துள்ளது. டென்மார்க் 2ஆவது இடத்தையும், ஐஸ்லாந்து 3ஆவது இடத்தையும், இஸ்ரேல் 4ஆவது



இடத்தையும், நெதர்லாந்து 5ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

ஸ்வீடன், நோர்வே, ஸ்விட்சர்லாந்து, லக்செம்பர்க், நியூசிலாந்து ஆகியன முறையே 6 முதல் 10 வரையிலான இடங்களைப் பிடித்துள்ளன.

கனடா 13ஆவது இடத்தையும், அமெரிக்கா 15ஆவது இடத்தையும், ஜெர்மனி 16ஆவது இடத்தை யும், இங்கிலாந்து 19 ஆவது இடத்தையும், பிரான்ஸ் 21ஆவது இடத்தையும் பிடித்துள் ளன. சிங் கப்பூர் 25ஆவது இடத்தையும், ஐக்கிய அரபு அமீரகம் 26ஆவது இடத்தையும், சவூதி அரேபியா 30ஆவது இடத்தையும் பிடித் குதுள்ளன.

ஜப்பான் 47ஆவது இடத்தை யும், பிரேசில் 49ஆவது இடத்தை யும், சீனா 64ஆவது இடத்தையும், நேபாளம் 78ஆவது இடத்தையும், பாகிஸ்தான் 108ஆவது இடத்தையும், இலங்கை 112ஆவது இடத்தையும், மியான்மர் 117ஆவது இடத்தையும், பங்களாதேஷ் 118ஆவது இடத்தையும், இந்தியா 126ஆவது இடத்தையும் பிடித்துள்ளன.

கடைசி இடமான 137ஆவது இடத்தை ஆப்கனிஸ்தான் பிடித்துள்ளது.

# அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் கைதான போலி படத்தால் பரபரப்பு



அமெரிக்க முன்னாள் அதிபர் ட்ரம்ப் கைது செய்யப்பட உள்ளார் என்ற தகவல் வெளியான நிலையில் அவர் கைது செய்யப்படுவது போன்ற போலியான ஒளிப்படங்கள் வெளியாகி சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

தன்னுடனான பாலியல் தொடர்பை மறைக்க அமெரிக்கா ஆபாசப் பட நடிக்கை ஸ்டோமி டேனியல்ஸ்க்கு ட்ரம்ப் ஒரு லட்சத்து 30 ஆயிரம் டொலர் வழங்கி இருந்ததாகக் கூறப்பட்டு வரும் குற்றச்சாட்டில் ட்ரம்ப் விரைவில் கைதாவார் என்று செய்திகள் வெளியாகின.

இந்த நிலையில் தன் மீதான குற்றச்சாட்டை ட்ரம்ப் தொடர்ந்து மறுத்து வந்தார். எனினும் தான் கைது செய்யப்படப்போகிறார் என்று தனது சமூக வலைத்தளப் பக்கத்தில் அவரே தெரிவவித்திருந்தார்.

அதற்கு எதிராகக் கிளர்ந்தெழுமாறு தனது ஆதவரளார்களுக்கு அவர் அழைப்பும் விடுத்திருந்தார். ட்ரம்ப் உறுதியாக கைதாவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதற்காக அமெரிக்காவின் முக்கிய நகரங்களில் பொலிஸார் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளனர் எனவும் கூறப்படுகிறது. நியூயார்க், வாஷிங்டன், லாஸ் ஏஞ்சலீஸ் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் பாதுகாப்பு பலமடங்கு அதிகரிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் ஒருவேளை பொலிஸாரால் ட்ரம்ப் கைது செய்யப்பட்டால் அந்த நிகழ்வுகள் எவ்வாறு இருக்கும் என்பதை விளக்கும் வகையில் செயற்கை நுண்ணறிவு படங்கள் இணையத்தில் வெளியாகி வைரலாகி உள்ளன.

இந்தப் படங்கள் போலியானது என்றாலும் அவை தத்ரூபமாக உருவாக்கப்பட்டிருந்ததால் இணையவாசிகள் பலரும் குழப்பம் அடைந்திருக்கிறார்கள்

முன்னதாக, அமெரிக்காவில் 2020 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 3ஆம் தேதி அதிபர் தேர்தல் நடைபெற்றது. இதில் ட்ரம்ப் தோல்வி அடைந்தார். ஜனநாயகக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜோ பைடன் வெற்றி பெற்றார்.

ஆனால், தேர்தலில் முறைகேடுகள் நடைபெற்றதாக ட்ரம்ப் குற்றஞ்சாட்டினார். அத்துடன் பல மாகாணங்களில் வழக்கும் தொடுத்தார். அவை அனைத்தும் தள்ளுபடி செய்யப்பட்டன. இதற்கிடையில், அமெரிக்காவின் பலபகுதிகளில் ட்ரம்ப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டம் கலவரமாக வெடித்தது. இது அமெரிக்க வரலாற்றில் பெரும் கரும்புள்ளியாக மாறியது நினைவுகூரத்தக்கது.

# மேற்குலகுக்கு எதிராக கூட்டுசேர ரஷ்ய . சீன தலைவர்கள் விருப்பம்

## மொஸ்கோவில் இருவரும் சந்தித்துப் பேச்சு



ரஷ்யா சென்றுள்ள சீன அதிபர் ஜி ஜின்பிங், அதிபர் புடினை செவ்வாய்க்கிழமை சந்தித்து பேச்சு நடத்தினார். மேற்கத்திய நாடுகளுக்கு எதிராக கூட்டு சேர அவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

உக்ரைன் மீது போர் தொடுத்ததால், ரஷ்யா மீது மேற்கத்திய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்தன. இதனால் ரஷ்யா – சீனா வர்த்தக உறவுகள் அதிகரிக்கத் தொடங்கின. இது இரு நாடுகளுக்கும் இடையே நெருக்கத்தை அதிகரித்துள்ளது.

இந்தியப் பயணத்தை முடித்துக் கொண்ட ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, உக்ரை னுக்கு திடீர் பயணம் மேற்கொண்ட நிலையில், சீன அதிபர் ஜி ஜின் பிங் 3 நாள் பயணமாக ரஷ்யா சென்றார்.

அதுவும், உக்ரைனின் மரியுபோல் நகரை கைப்பற்றிய பின் அங்கு ரஷ்ய அதிபர் புடின் முதல்முறையாக சென்று வந்த மறுநாளே, அவரை மொஸ்கோவில் அதிபர் ஜின்பிங் சந்தித்து நான்கரை மணி நேரம் பேச்சு நடத்தினார்.

புடினுக்கு எதிராக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் கைதாணை பிறப்பித்துள்ள நிலையில் சீன அதிபரின் பயணம், புடினுக்கு மிகப்பெரிய ஊக்கத்தை அளித்துள்ளது.

மிகவும் அரிதாக, பேச்சுக்குப்பின் ஜின் பிங்கை, புடின் தனது காரில் அழைத்துச் சென்றார். இருவரும் சிரித்தபடி காணப்பட்டனர்.

இந்தச் சந்திப்பின்போது, உக்ரைன் விவகாரம் குறித்து பேச்சு நடத்த தயாராக இருப்பதாக புடின் தெரிவித்தார். இதற்காக சீனா மேற்கொண்டுள்ள முயற்சிகளையும் அவர் பாராட்டினார்.

ரஷ்ய அதிபரை சந்தித்த பின் பேட்டியளித்த அதிபர் ஜின்பிங், “சீன–ரஷ்யா இடையேயான பாதுகாப்பு உறவுக்கு சீன தொடர்ந்து முக்கியத்துவம் அளிக்கும். சீனாவும், ரஷ்யாவும் பெரிய சக்திவாய்ந்த அண்டை நாடுகள்” என்றார்.

ரஷ்யாவுக்கு ஐரோப்பிய சந்தைகள் மூடப்பட்டுள்ளதால், சீனாவுக்கு எரிசக்தி ஏற்றுமதியை ரஷ்யா அதிகரித்துள்ளது.

இருநாடுகள் இடையே பொருளாதார உற வுகளை மேலும் ஊக்குவிப்பது தொடர்பாகவும் இவர்கள் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப் படுகிறது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A , கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 22.03.2023 இல் வெளியிடப்பெற்றது.